விலை சதம் 5

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி சதம்		5
3 மாதச் சந்தா	ரூ	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A தட்டாரத் தெரு கொழும்பு

Phone 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு சர்வஜித்து வரு புரட்டாசி 17உ வெள்ளிக்கிழமை | Colombo, October, 3 1947 | ஹிஜ்ரி 1366 துல்கஃதா பிறை 17 | இதழ் 122

ஒரே மனிதரடங்கிய எல்லை ராணுவப் பாதுகாப்புப் படை

மகாத்மாவுக்குமவுண்ட்பேட்டன் பாராட்டு

காந்தியின் 79-வது பிறந்த தினக் கொண்டாட்டம்

உலகுக்கு இந்தியா ஈந்த உத்தமர்

அமெரிக்க, பிரிட்டிஷ் அறிஞர்களின் பாராட்டுகள்

புதுடில்லி, அக். 2

இன்று மகாத்மா காந்தி பிறந்த தினம். இன்று காந்திஜிக்கு 78வயது முடிந்து79 வது வயது ஆரம்பமாகிறது. உலகின் உள்ளத்தைக் கவர்ந்துள்ள இத்தியாக புருஷனின் பிறந்த தினம் இன்று இந்தியா வெங்கும் அதிவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இக்கொண்டாடடத்தை முன்னிட்டு இந்திய அரசாங்கமும் மற்றும் வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனங்களும் தங்கள் சிப்பந்திகளுக்கு விடுமுறையளித்திருக்கின்றன.

அகில இந்தியாவும் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் போது, 'ஓரே மனிதரடங்கிய எல்லைப் பாதுகாப்புப் படை' என்று லார்டு மவுண்ட்பேட்டனால் வர்ணிக்கப்பட்ட இந்த அகிம்சா போர்த் தளபதி, இன்றைய தினத்தை பிரார்த்தனை செய்வதிலும், கைராட்டையில் நூல் நூற்பதிலும் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்.

இந்தியா சுதந்திரமடைந்தபின் கொண்டாடப்படும் காந்திஜியின் பிறந்த தினக் கொண்டாட்டம் இதுவே முதலாவதாகும். ஆனால் மகாத்மா காந்தி இந்த தினத்தை எப்பொழுதும் போலுள்ள சாதாரண ஒரு தினமாகவே கருதுகிறார்.

இன்று அவர் 24 மணி நேரம் உணாவிரதமிருப்பதால், அவர் காய்கறி பதார்த்தங்கள், ஆட்டுப்பால், பழரசம் இன்று சாப்பிடமாட்டார். இன்று வழக்கம்போல அதிகாலையில் 4 மணிக்கு எழுந்திருந்து பிரார்த்தனை நடத்தி விட்டு முக்கியமான கடிதங்களை பார்வையிட்டார். அதன் பிறகு உடம்பு பிடித்து விடப்பட்டதும் ஸ்நானம் செய்தார். பிறகு வெளியில் உலாத்திவிட்டு திரும்பி வந்தார். இன்று ஏராளமானவர்கள் அவரை தரிசிக்க வந்து கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவிலிருந்து வாழ்த்துத் தந்தி

நியூயார்க், அக். 2

மகாத்மாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு, அமெரிக்காவிலுள்ள இந்தியா லீக் தலைவர் ஜே. ஜே. சிங்கும், அதன் நிர்வாக கமிட்டித் தலைவர் ரிச்சார்ட் ஜே. வால்ஷும் மகாத்மாவுக்கு கீழ்க்கண்ட வாழ்த்துத் தந்தச் செய்தியை அனுப்பியிருக்கிறார்கள்:- இந்த வருடத்திய தங்கள் பிறந்த தினக் கொண்டாட்டம் மறறெல்லா வருடங்களின் கொண்டாட்டங்களையும் விடச் சிறந்தது என்று நாங்கள் மிகக நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடுகிறோம். தாங்கள் நீண்ட ஆயுளோடிருக்கவேண்டுமென்று நாங்கள்பிரார்த்திக்கிறோம்.சுதந்திரக் கடமைப்பட்டுள்ளான்.

இந்தியாவில் ஐக்கியத்தையும் சகோதரத்துவத்தையும் நிலைநாட்டுவதில் தாங்கள் தலைமை பூண்டு பணியாற்ற வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம்.

பிரிட்டனில் கொண்டாட்டம்

லண்டன், அக். 2

இன்று லண்டனில் மகாத்மா காந்தியின் 79-வது பிறந்த தினம் அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்தியா லைக் கமிஷனர் கிருஷ்ண மேனன் பிரிட்டனிலுள்ள இந்தியர்களுக்கும் மற்றும் பிரமுகர்களுக்கும் ஓர் விமரிசையான விருந்தளித்தார்.

பிரிட்டனிலுள்ள இந்தியர்கள் மகாத்மா காந்தியின் உருவப் படமொன்றை இந்தியா மாளிகையில் அமைப்பதற்கு அதை இன்று பரிசாக வழங்குகிறார்கள்.

இன்றிரவு ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்தில் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். லண்டனிலுள்ள காந்தி சங்கத்தார் காந்திஜி பிறந்த தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமையன்று மற்கு லண்டனிலுள்ள இந்திய ஹோட்டலில் ஒரு விருந்தளிப்பார்கள்.

அறிஞர்கள் பாராட்டு

மகாத்மா காந்தியின் பிறந்த தினத்தை முன்னிட்டு இன்று பிரிட்டனிலுள்ள பல அறிஞர்கள் தங்கள் பாராட்டுதலை தெரிவித்தனர். இடது சாரிக் கொள்கை அறிஞரும் பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் மாஜி தலைவருமான பேராசிரியர் ஹரால்ட் லாஸகி பின்வருமாறு தெரிவித்தார்:-

முழு உலகத்தின் சிந்தனாசகதியின் அஸதிவாரத்தையே மாற்றி புதிய சக்தியை சிருஷ்டிக்கும் ஆற்றலும் அறிவும் அன்பும் உடைய ஒரு சில பேரறிஞர்களின் கோஷ்டியைச் சேர்ந்தவர் மகாத்மா காந்தி ஆகவே அவர் தனது வாழக்கையில் பெற்ற சித்திகளையும் மாசுமறுவிலாத அவரது தூய எண்ணங்களையும் மதித்து பூஜிக்க வேண்டியது தன்மதிப்புளள நாகரீக உலகின் நீங்காக் கடமையாகும்.

பார்லிமெண்டில் இந்தியா கோஷ்டித் தலைவரான திரு ரெஜினால்ட் சோரன்சன் பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்த யுகத்தில் உலகில் அவதரித்த மகா புருஷர்களில் மகாத்மா ஒருவர். மானிட வர்க்கத்திற்கே நலன் பயக்கும் மகாத்மாவை இந்தியா நமக்குத் தந்துதவியிருக்கிறது. மானிட வாழ்க்கையின் பெரும் பயனை அறிந்துள்ள இவ்வுலகில் வதியும் ஒவ்வொரு மனிதனும் மகாத்மா காந்திக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளான்.

இந்தியா-பாகிஸ்தான் உறவு

இந்திய சர்க்கார் அறிக்கை

பஞ்சாப் கலக நிலைமை

புதுடில்லி, அக. 1

யுத்தத்தைப்பற்றி காந்திஜி பிரஸ்தாபித்தது பற்றி பாகிஸ்தானில் மனக்குழப்பமேற்பட்டிருப்பதாகவும் அது சம்பந்தமாக இந்திய சர்க்கார் தங்கள் கருத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று பாகிஸ்தான பிரதமமந்திரி லியாகத்அல்கான் இந்தியா பிரதமமந்திரி பண்டித நேருவுக்கு தந்தி யனுப்பியிருந்தார் அதற்கு இந்தியா சர்க்கார் பின்வருமாறு பதிலளித்தனர்:- செப்டம்பர் 19-ம் தேதி இந்தியாவும் பாகிஸ்தானும் சேர்ந்து வடுத்த கூட்டுப் பிரகடனக் கொள்கையிலிருந்து நழுவ இந்திய சாக்கார் விரும்பவில்லை. இரு நாடுகளுக்கு மிடையே சச்சரவு ஏற்படின் இரு நாடுகளுக்கும் நாசம் உண்டாகும் என்பதும் இரு நாடுகளும் அமைதியை நிலைநாட்டுவதில் ஒத்துழைக்க வேண்டுமென்பதுமான அபிப்ரகடனக் கொள்கையையே இந்திய சர்க்காரையாளுகிறார்கள். காந்திஜி தெரிவித்ததாக தரித்துப் பேசுமாயான யுத்தப் பிரஸ்தாபச்செய்தியற்றி காந்திஜிக்கு தனது அகிம்சா கொள்கையை தெரியப்படுத்தி அறிக்கை வெளியிடடிப்பதை யாவருமறிவா.

பாரிசில் நடைபெற்ற சர்வதேச யாத்திரீகர்காங்கரசில பாக்கிஸ்தான பிரதிநிதி லத்தீப் பேசியபோது, பாகிஸ்தானை உலக யாத்திரீகாகளுக்கு வசதியான ஓர் நாடாகக்கபாக்கிஸ்தான் சாக்கார் திட்டம் போடடிருப்பதாகத் தெரிவித்தார்.

பாக்கிஸ்தான ஐக்கிய தேசஸ்தாபனத்தல் சொந்துவிட்டதைப்பாராட்டி பிரிட்டிஷ் பிரதமமந்திரி அடலி பாக்கிஸ்தான் பிரதம மந்திரி லியாகத் அலகானுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

பஞ்சாப் நிலைமை

கிழக்கு பஞ்சாப்பில் வெள்ளத்தில் ரயில் பாலங்கள் மூழ்கியிருப்பதால் ரயில்போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

லயால்பூர் அருகே யுள்ள முஸ்லிம்லீக் அகதிகளை முகாம் தாக்கப்பட்டதில் 115 அகதிகள் மாண்டனர். அமிர்தசரசுக்கு மேக முஸ்லிம் அகதிகள் வழிப்பயணத்தில் தாக்கப்பட்டதால் 45 பேர்கள் மாண்டனர்.

லஹூர் அருகே கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ் ரயில் வரும் போது இருவர் தூக்கி எறியப்பட்டார்; ஒருவர் மாண்டார் இது சம்பந்தமாக 10 பேர்கள் கைது செய்யப்பட்டு ஜாமீன் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள்.

'நியூ ஸ்டேட்ஸ்மன் அன்ட் நேஷன்' என்னும் வாரப்பத்திரிகையின் ஆசிரியர் திரு. கிங்ஸ்லி மார்டின் பின்வருமாறு தெரிவித்தார்:-

ஒரு லட்சியத்திற்காக தங்கள் வாழ்க்கையில் பாடுபடும் பெரியார்களில் அந்த லட்சியம் தங்கள் வாழ் நாட்களிலேயே நிறைவேறுவதைப் பார்க்கக் கொடுத்துவைத்துள்ளவர்கள் ஒரு சிலரே. அச்சில்ல மகாத்மா ஒருவர். இந்தியா சுதந்திரமடையப் பாடுபட்ட அவர் தன வாழ் நாளிலே இந்தியா சுதந்திரமடைந்ததைப் பார்த்துவிட்டார். [illegible]

தேர்தல் ஆட்சேபனை மனுக்கள்

மத்துகம பிரதிநிதி மீது தாக்கல் செய்யப்பட்டது

கொழும்பு, அக் 2

மத்துகம தேர்தல் தொகுதியில் வெற்றிபெற்ற திரு. வில்மட் ஏபிரகாம் பெரேரா மீது ஓர் ஆட்சேபனை மனு வை திரு அப்புஹாமி, திரு வில்வா ஆகிய இருவர் இன்று சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்தார்கள்.

மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளாவன:- படமுறுத்தல்; தகாத முறையில் செல்வாக்கை உபயோகித்தது; லஞ்சம் முதலியன வழங்கியது.

திரு ஏ ஈ குணசிங்கா தேர்தலுக்கு ஆட்சேபனை

கொழும்பு மத்திய தொகுதி பிரதிநிதியான திரு ஏ. ஈ குணசிங்காவின் தேர்தலை ஆட்சேபித்து திரு. எம் எச். எம். முனுஸ இன்று சுப்ரீம் கோர்ட்டில ஓர் மனுவைத தாக்கல் செய்தார்.

திரு. குணசிங்கா வாக்கெடுப்பில ஆள மாறுட்டம் செய்தாகவும், தேர்தல சட்டம் 62 வது பிரிவுகளு வரோதமாக தோதல செலவு செய்ததாகவும், பழைய அரசாங்க சபைச் சட்டப்படி ஊழல் குற்றம் சாடடப்பட்ட தனையே தோதலில தனக்கு ஏஜண்டாக நியமித்துக் கொண்டதாகவும் மனுவில் காரணங்கள தொவிக்கப்பட்டிருக்கின்றன

வட்டகொடை எஸ்டேட்டில இரட்டைக் கொலை

கண்டி அசைஸ் கோர்ட்டில் விசாரணை

கண்டி, அக் 2

எல்பிட்டியாவுக்குச் சமீபத்தில உள்ள வட்டகொடை வத்தை எஸ்டேட் சூப்ரன்டெண்ட் திரு. செனிவிரத்தனா பண்டார அமுனுகமா எனபவரையும் அவரது வேலைக்காரனையும் கடந்த வருடம் பெப்ரவரி 12-ம் தேதி இரவு கொலைபுரிந்ததாக யூ எச. உக்கு டுரையா என்னும் திகிரி துரையா மீதும் எல். ஓ. அப்புஹாமி மீதும் குற்றம் சாடடித் தொடரப்பட்ட வழக்கு கண்டி அசைஸ் கோர்ட்டில் நீதிபதி திரு. சூட்ஸ் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விசாரணையின்போது எதிரிகள் தாங்கள குற்றவாளிகளல்லவென்று தெரிவித்ததனர் பலர் இவ்வழக்கல சாடசியமளித்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.

'ஸ்பீக்கர்' பதவியும் 'செனட்' சபை தேர்தலும்

பிளவர் ரோட்டில் யூ. என். பி. சதயாலோசனை

'யமுனா'வில் எதிர்க் கட்சிகளின் மந்திராலோசனை

("சுதந்திரன்" அரசியல் நிருபர்)

கொழும்பு, அக். 3

யூ. என். பி. கட்சியினர், தேர்தலில் தோலவியுறறவர்களை "செனட்" சபைகுத் தெரிவு செயய மாட்டார்கள்.

நேற்று "பிளவர் ரோட்"டிலுளள யூ. என். பி. கடசியினா தலைமைக் காரியாலயததல நடந்த கூடடததில் மேறகூறியவதமாக அவாகள் அபிப்பராயப்படடுள்ளதாக அறியப்படுகிறது.

மேலும் யூ. என். பி. கட்சியினர் "செனட்" சபைக்கு அங்கததவர்களைத் தொவு செய்வதை பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயககா தம கையிலேயே விட்டுவிட வேண்டும் என்று ஒவ்வொரு யூ. என். பிக் கட்சிப பாராளுமனறப் பிரதிநிதியும் தனித்தனியே தததமது அபிப்பிராயததை இவ்வுயததில தமக்குக் கூற வேணடுமென்றும் கோரியுள்ளாராம்.

யூ. என். பியினர் எட்டு அங்கத்தவர்களை "செனட்" சபைக்குத் தொவு செய்வார்கள். அவர்களில் ஒருவா ரூமதி ஏ. எப். மெலமுரே என்றும அறியப்படுகிறது.

பாராளுமன்றச் சபைக்கு (ஸபீக்கர்) தலைவர் பதவிக்கு திரு. ஏ. எப் மெலமுரேயை ஆதரிக்க வேண்டுமென்று யூ. என பிக் கடசியினர் ஏகமனதான அபிப்பிராயங்கொண்டுளளனர்.

நேற்று முன்தினம் இரவு நடந்த பாராளுமன்ற எதிர்க்கட்சியினர் கூட்டத்தில் எதிர்க்கட்சியினர் எதிர்காலத்தில தாம பாராளுமன்றததில எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயங்களையிடடு நளளிரவு வரைக்கும் விவாதித்தார்கள் என அறியப்படுகிறது.

எதிர்க்கட்சியினர் டாக்டர் என் எம். பெரேராவை 'ஸ்பீக்கர்' பதவிக்கு ஆதரிப்பதாகப் கூறப்படுகிறது.

ரூமதி என். எம். பெரேராவை எதிர்க்கட்சியினா 'செனட்' சபைக்கு நியமிபாராகளென பேசப்படுகிறது. யூ என். பிக் கட்சியின் அபிப்பசகராகத் தோதல்ல போடடியிடடுத் தோல்வியுறற ஒரு முஸ்லிம அங்கத்தவர் தமமை செனட் சபைக்கு தெரிவு செயயவேண்டும் என்று கடசித் தலைவரைக் கேடடுள்ளாராம். இவரின் மனுவை யூ. என். பிக கட்சியினர் ஆதரிகக மாட்டார்களென்றம கூறப்படுகிறது

பிரதம மந்திரி தமது யூ. என். பிக கடசியினருக்கிடையே மந்திரி பதானங்கள் வழங்கியதில அதிருப்தி ஏற்படடு இரண்டொரு அங்கததவர்கள யூ என். பிக கட்சியிலிருந்து வலகிக் கொண்டாகளென்றும் இன்னும மூன்று வெளியேறுவாகள என்றும் பேசபபடுகிறது.

கொழும்பில் நோய்கள் பரவக் காரணம்

தேநீர்க் கடைகள், சிற்றுண்டி சாலைகளில் சுகாதாரக் கேடு

பிரபல டாக்டரின் அபிப்பிராயம்

('சுதந்திரன்' நிருபர்)

தேநீர்க் கடைகளும், சிற்றுண்டிச் சாலைகளும், வீதிகளில் விற்கப்படும் உணவுகளுமே கொழும்பில் பல தொற்று நோய்களுக்கும், ஏழைகளிடையே பலவித வியாதிகள் ஏற்படுவதற்கும் காரணம் என்று நேற்று எனகு ஒரு பிரபல டாக்டர் கூறினார்.

"கொழும்பு நகரில் உள்ள அநேக தேனீர்க் கடைகளுக்குள்ளே சற்று புகுந்து பாருங்கள், எச்சில் இலைகள் போடப்படும் வாளிகள் மூடப்படுவதில்லை; இலையான்கள ஆயிரக்கணக்கில் தின் பண்டங்களிலும், மேசைகளிலும் கிணுகிணுத்துக்கொண்டே இருக்கும்; ஒரு வாளி தண்ணீரிலேயே காலை தொடக்கம் மாலை வரைக்கும் தேநீர், காப்பி அருந்துபிததவளைப் பாததிரங்களும் தம்ளர்களும கழுவப்படும்." குசினி நிறைய அழுகிய பதார்ததங்களும், ஊத்தையும் நிரம்பிச் சாக்கடை போன்று தோற்றமளிக்கும்

"மேலும் மாதக்கணக்கில் ளுநனஞ் செய்யாதவர்கள் போலக காணப்படுவார்கள் கடைச் சிப்பந்திகள் அவர்கள் உடுததிருக்கும் ஆடைகளோ நெடுபில் போட்டாலும் எரிந்துகொள்ளாது-அசதனை ஊத்தை நிறைந்தது" என்றும அந்த டாக்டர் கூறி "இந்தக் கடைகளுக்கா முனிசிப்பல் அதிகாரிகள உணவு விற்பதற்கு உததரவு கொடுக்கிறார்கள்?" என்று கேட்டார்.

டாக்டர் மீண்டும் சொன்னதாவது, "இககடைகளுக்கு உததரவு கொடுப்பதால் முனிசிப்பல் அதிகாரிகளே பல வித வியாதிகளைப் பரவச் செய்வதற்கு அனுமதியளிக்கிறார்கள் என்று சொலலவேண்டியிருகிறது.

"இந்த ஊழலைப் போக்க இந்நகரில் ஒரு முனிசிபல் சபைப் பிரதிநிதியாவது கிடையாதா?

"வீதிவழியே தின் பண்டங்களைத் திறந்தபடியே காலை முதல் மாலை வரைக்கும் வைததிருந்து விற்கவிடுவதைபோறை கேவலமானது வேறொன்றுமில்லை. வயிறறுக்கு உணவு இலலையே என்று திரியும ஏழைகள் தங்களிடம் உள்ள சில்லறைச் சதங்களைக் கொடுதது நோயையு மல்லவா வாங்கிக் கொள்ளுகிறார்கள்" என்று கூறினர்.

இவ்வூரில் உள்ள ஹோட்டல்கள எப்படியிருக்கின்றன என்று கேட்டபொழுது, அவர் 'அவை அவ்வளவு மோசமில்லை, ஆனாலும் குருந்துவசற்கு எவ்வளவோ இடமுண்டு" என்று கூறினர்.

"முனிசிபல் டாக்டர்களுக்கும் சனிட்டரி இன்ஸபெக்டாகளுக்கும் முனிசிபல சபையினர் தக்க அதிகாரமளிதது இந்நிலையை மாற்ற வேணடும், அலலது அவ்வுததியோகஸதர்களுக்கு இக் கேவல நிலையைத் தவிர்க்கும அதிகாரங்கள இருந்தும் அதை துஷ்பிரயோகம செய்வதாயிருந்தால் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேணடும் என்றும கூறினர்.

பாலஸ்தீன் தகராறு

ஐரோப்பிய யூதர்கள் பாலஸ்தீனத்துக்குச் செல்ல முயற்சி

நியூயார்க், அக் 1

குடியேற்ற பிரச்னை சமபந்தமாக தடை செய்வதற்கு சர்வதேச ஒததுழைப்பு ஏறபட வேண்டுமென்று எகிப்து, ஈராக், லபானன் கொண்டுவந்த தீர்மானததை இன்றி நடவடிக்கை கமிட்டி அசெம்பளியின் நடவடிக்கைக்குறிப்பில் சேர்த்துக்கொள்ள இணங்கியது.

பாலஸதீன சுதந்திரத்தின் எதிர்காலம் சம்பந்தமாக நிர்ணயம் செய்ய யூத ஸ்தாபன பிரதிநிதிகளும் அராபிய உயர் கமிட்டியின் பிரதிநிதிகளும் மகாநாடு கூடி ஒரு சமரச ஒபபந்ததிற்கு வர வேண்டுமென்றும், அந்த ஒபபந்ததை அறிக்கையில பாலஸதீனததிலுள்ள கிறிஸ்தவ, இஸ்லாமிய, யூதமத நலனகளுக்கு பாதுகாபபு அளிகக்கும் சிபார்சுகள் இருக்க வேணடுமென்றும் சவ்வடார் பிரதிநிதி பாலஸதீன கமிட்டியில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

ஜெருசலேமிலுள்ள யூத பயங்கர புரட்சி ஸதாபனததார், பாலஸதீனத்தில் தற்காலிக யூத சர்க்காரையும் யூத அரசியல் நிர்ணய சபையையும் உடனே ஏற்படுதத வேணடுமென்றும், அந்த தற்காலிக சாக்கார் பாலஸதீன சுதந்திரததைப் பிரகடனம செய்து, யூதர்கள் தங்கள் தாய்நாடடுக்குத் திரும்ப உரிமை யுண்டென்று கட்டளை பிறப்பிக்க வேணடுமென்றுப் ஓர் அறிக்கை வெளியிடடிருக்கன்றனர்.

பல்கேரியா, ருமேனியாவிலிருந்து இரண்டு கப்பலகளில் 2500 யூதர்கள் பாலஸதீனததில் இறங்குவதற்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள என்றும், மற்றுமொரு கப்பல் கருங்கடலில் தென்பட்டதாகவும், அது யூதர்களை பாலஸதீனததிற்கு ஏற்றிக்கொண்டுபோகச் செல்கிறதென்றும், இன்னுமொரு கப்பல் ஜிபரால்டர் அருகே சென்றுகொண்டிருந்ததென்றும் லண்டன் செய்திஅறிவிக்கிற .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 ஏ, தட்டாத் தெரு, கொழும்பு. போன்: 3411.

சர்வஜித்து ஹு புரட்டாசி மீ 17உ வெள்ளிக்கிழமை

கற்றறி மூடர்

படித்த ஒரு கூட்டத்தார் கிளம்பினார்கள். அதிகமாகப் படித்தவர்கட்கு யார் புத்தி சொல்ல முடியும்? புத்திசொன்னாலும் கேட்பார்களா? ஒவ்வொருவரும் தான் சொல்லியதே சரி என்று சாதிக்கும் திறமுடையவர்கள். அயலூர் போய்ச் சேர்ந்ததும், வயிற்றுப் பசி எடுக்க ஆரம்பித்தது. அக்கூட்டத்தில் இருந்த வைத்தியரை காய் கறி வாங்க அனுப்பினார்கள். பாடகரை உலை வைக்கச் சொன்னார்கள். தத்துவ சாஸ்திரியார் எண்ணெய் வாங்கப் போனார். இவ்விதமாகப் போனதில் என்ன நடந்தது? பாகற்காய் பித்தம், அது வாய்வு, இது உஷ்ணம் என்று காய் கறி வாங்காமல் வந்தார் வைத்தியர். உலை பாடகருக்குப் பாட்டைக் கிளப்பியது. அரிசி கொதிப்பதில் ஏற்பட்ட தாளத்திற்குத் தக்க விதமாகப் பாடலானார். தாளந்தவறியதும், உலைப்பானையைப் போட்டுடைத்தார் பாடகர் எண்ணெய் வாங்கப் போனவர் இலையால் தைக்கட்டட பாத்திரத்தில் எண்ணெய் வாங்கிக் கொண்டு வருகையில் எண்ணெய் இலைக்கு ஆதாரமா அல்லது இலை எண்ணெய்க்கு ஆதாரமா என்பதைப் பற்றிய பிரச்னை கிளப்பி இலைக் கிண்ணத்தைத் திருப்பி எண்ணெயைக் கொட்டி விட்டுத் திரும்பினார். கடைசியில் எல்லோரும் பட்டினிதான்.

இந்நிலையில் தான் இருக்கிறது நமது சேனநாயக்காவிற்கு ஏற்பட்ட எதிர்க்கட்சி திரு சேனநாயக்கா பிடித்திருக்கும் ஆட்களைப் பாருங்கள். அவர் எது சொன்னாலும் 'ஆம்' என்று சொல்லக் கூடியவர்களே! மறுத்துச் சொல்ல ஆளில்லை. எக்காரியத்திலும் ஏக மனதாகத் தீர்மானம் ஏற்படும். செனட்சபைக்கு நியமன விஷயத்தைப் பற்றி யூ. என். பி. கட்சியார்கள் பேசினார்கள். முடிவு என்ன? நீங்கள் பகிரங்கமாகப் பேசவேண்டாம். ஒவ்வொருவராக என்னிடம் வந்து பேசுங்கள் நான் சொல்லுகிறேன் என்றார் தலைவர். "ஆம்" என்றார்கள் மற்றவர்கள்.

ஆனால் எதிர்க் கட்சியார் கூடினார்கள். ஒவ்வொரு கட்சியிலும் ஒவ்வொரு கொள்கை கூட்டம் கூடினால் யார் கட்சி பெரிது, யார் கொள்கை நல்லது என்ற விவகாரம். சமசமாஜ கட்சிதான் பெரிது என்கிறார் பெரேரா. லெனின் கட்சிதான் நல்லதென்கிறார் சில்வா. மார்க்ஸ்தான் மேலே சொல்லிய இரண்டு கட்சிக்கும் தகப்பன் என்கிறார் கெனமன். எந்தக் கட்சியிருந்தாலும், தமிழனுக்குச் சுதந்திரம் வேண்டும் என்கிறார்கள் தமிழ்க் காங்கிரஸ். எல்லாம் எங்க அண்ணன் சொல்லுகிறபடி சரி என்கிறது இந்தியக் காங்கிரஸ் இவற்றில் எல்லாம் சேராத உதிரிப் பேர்வழிகள், உங்களுடன் சேர்வதில் எங்களுக்கென்ன லாபம் என்கிறார்கள். கூட்டங்கள கூடி முடிவில்லாமல் கலைந்தகொண்டிருக்கிறார்கள். இக்கூட்டத்தில் கெட்டிக்காரர்கள் இல்லையா? இருக்கிறார்கள்! எல்லோரும் கெட்டிக்காரர்களாக விருப்பதால்தான் இந்தக் கஷ்டம் என்போம். முட்டாள்கள் கூடிய விடத்தில் அபிப்பிராய பேதம் இருக்காது. இது இயல்பு. படித்தவர்கள், அதிலும் அதிகப் படித்தவர்கள் கூடினால் தர்க்கந்தான். முடிவு கிடைக்காது.

எதிர்க்கட்சியில் கூடிய கூட்டத்தவர்கள் பற்பல அபிப்பிராயங் கொண்டவர்களாக விருக்கலாம். பற்பல கொள்கைகள் கொண்டவர்களாகவிருக்கலாம். அப்படியிருந்தும், அவர்களை ஒன்று கூட்டி வைத்தது எது? சேனநாயக்கா கூட்டத்தாரால் நாட்டிற்கு ஏற்படவிருக்கும் ஆபத்து. சேனநாயக்கா இஷ்டப் பிரகாரம் இலங்கைக்குக் கொடுக்கப்பட்ட அரசியல் திட்டம். இந்த அரசியல்திட்டத்தை உடைத்து, நாட்டிற்கு வேண்டிய அரசியல் திட்டத்தை நாட்டினரே நிர்ணயிக்கும்படி செய்ய வேண்டும் என்பதில் இக்கூட்டத்தவர்களுள் அபிப்பிராய பேதம் இராது என்பது திண்ணம்.

பாராளுமன்ற சபையில் எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுமா, வேண்டாமா? வேண்டும் என்றால் யார் இருக்க வேண்டும் என்ற பிரச்னையெல்லாம் இப்பொழுது தேவையில்லை இவர்கட்கு. இவர்களுக்கு இருக்கவேண்டிய இலட்சியம் (1) சோல்பரித் திட்டம் உடைபடவேண்டும். (2) அரசியல் நிர்ணய சபை ஏற்பட வேண்டும் (3) அரசியல் நிர்ணய சபைமூலம் இலங்கையின் அரசியல் முறையை டிசம்பர் மாதத்திற்குள் அமைக்க வேண்டும். (4) அதுவரையில் எல்லா கட்சியினரும் கொண்ட தற்காலிக மந்திரி சபையமைக்கப்பட வேண்டும். (5) பெப்ரவரி மாதம் கொடுப்பதாகச் சொன்னபடியுள்ள டொமினியன் அந்தஸ்தல்ல, பூரண சுதந்திரம் பெற்று வெள்ளையர் ஆட்சி அடியோடு போகும்படி செய்ய வேண்டும்.

ஆகவே, எதிர்க்கட்சியார்கள் மேலே சொல்லிய திட்டத்தைப் பிரகடனம் செய்து அதற்கான வேலையை உடனே செய்ய வேண்டும். பாராளுமன்ற சபைக்குள்ளிருந்து வேலை செய்வதோடு நில்லாமல் மேற்சொல்லிய கொள்கைகளுக்கு நாட்டின் பொது மக்கள் உழைப்பதற்கும் பிரசாரம் செய்யவேண்டும். அவ்வித பிரசாரம் இன்று முதல் ஆரம்பிக்க வேண்டும். அவசியமானால், தனக்குப் பலம் போதாவிட்டால் பாராளுமன்ற சபையைக் கலைத்துப் புது தேர்தலுக்குத் தயார் என்று சேனநாயக்கா பயமுறுத்திக் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. சீக்கிரம் பொதுத் தேர்தல் வந்தால் என்ன செய்வது என்ற பயம் இவர்கட்குத் தேவையில்லை. யூ. என். பிக்கட்சியாரிடத்தில் நாட்டில் வெறுப்புள்ள நேரம் இது. இந்த சந்தர்ப்பத்தைக் கைவிட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது. அரசியல் கொள்கைகளைப் பற்றிப் பிரசாரஞ் செய்து காலங்கடத்தாமல, உடனே செய்ய வேண்டிய காரியத்திற்குத் திட்டம் போட்டு வெற்றி பெற முயற்சிப்பார்கள் எனக் கருதுகிறோம். எல்லோரும் படித்தவர்கள், புத்திசாலிகள்; புதிசாலித்தனமாக நடந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

பப்ளிக் ஸேர்வீஸ் கமிஷனர்

திரு. ஏ. மகாதேவாவை, சேனநாயக்கா அரசாங்கம் பப்ளிக் ஸேர்வீஸ் கமிஷனர் ஸில் ஒருவராக நியமிகப் போவதாக ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகின்றது.

திரு. மகாதேவா சென்ற அரசாங்க சபையில் 12 வருட காலமாக யாழ்ப்பாணப் பிரதிநிதியாக இருந்தவர். ஸர். பாரன் ஜெயத்தலக்கா இந்தியாவில் இலங்கையின் ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டதன் பின் உள்நாட்டு மந்திரியாகக் கடமையாற்றியவர். ஆனால் சோல்பரி அரசியற் திட்டத்தை இலங்கை அரசாங்க சபை ஏற்றதன் பின்பு உருவாக்கப்பட்ட யூ. என். பிக் கட்சியில் சேர்ந்து அதன் உப தலைவர்களுள் ஒருவராகக் கருமமாகள் ஆற்றினார். இக்கட்சி அபேட்சகராகவே பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணப் பகுதிக்குப் போட்டியிட்டுத் தோல்வியுற்றார்.

ஆகவே, இப்பத்திரிகைச் செய்தி உண்மையானதாக இருந்தால் ஒரு கட்சி சார்பாக உழைத்துத் தோல்வியுற்றவரை இப்பெரும் பதவிக்கு நியமித்தல் ஒண்ணாது என்பதே எமது அபிப்பராயம்.

யாழ்ப்பாணத் தேர்தலில் எத்தனையோ மக்கள் அவருக்கு எதிராக வேலை செய்திருக்கக் கூடும் அவர்களின் பிள்ளைகள், உற்றார் உறவின் முறையினர் பலர் அரசாங்க சேவையிலீடுபட்டிருப்பார்கள். அவர்கள் யாவருக்கும் கட்சி சார்பாக உழைத்ததிரு.மகாதேவாஎதிரானக மகர்கள் ஆற்றக்கூடும்; அலலதுக மங்கள் ஆற்றாது போனாலும் அவர்கள் அப்படி எண்ணக் கூடும். திரு. மகாதேவா விருப்பு வெறுப்பற்ற சந்நியாசியல்ல. பப்ளிக் ஸர்வீஸ் கமிஷன் என்று கூறப்படும் அரசாங்க சேவையாளர்களுக்கு நீதிசெலுத்தவும் தக்கவர்களைச் சேவைக்குத் தெரிந்தெடுப்பதற்காகவும் ஏற்படுத்தப்படும் உத்தியோகஉதர்கள் கட்சி சார்பற்றவர்களாக நியமிக்கப்படல் வேண்டும். இதுவே தனநாயக நாடுகளில் கைக்கொள்ளப்பட்டு வருவதாகும். கவர்னர் இவ்விஷயத்தில் பொதுமக்களின் அதிருப்தியைஉண்டாக்காது கமமாற்ற வேண்டுமென வேண்டுகின்றோம்.

சாம்ராஜ்யத்தின் புதிய நாணய இயக்கம்

தென்னாப்பிரிக்காவின் சிபார்சு

தங்க உற்பத்தியின் ஆதாரம்

நியூயார்க், அக். 2

இப்பொழுது பொருளாதார மீட்சிக்கு பிரிட்டன் நடத்தும் போராட்டத்துக்கு தென்னாப்பிரிக்க யூனியன் புதிய ஒரு ஆலோசனையைத் தெரிவிக்கின்றது. அந்த ஆலோசனைப்படி உலகின் சுமார் 80 சத விகித தங்கத்தை சுரங்கங்களில் இருப்பாகக் கொண்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளான தென்னாப்பிரிக்கா, இந்தியா, நியூஸிலியா, மேற்காப்பிரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா முதலியன உட்பட எல்லா சாம்ராஜ்ய நாடுகளும் தங்களிடமுள்ள தங்கங்களை ஒன்றாக ஒரு நிதியில் போட்டு புதிய சாம்ராஜ்ய நாணய நோட்டுக்களை வெளியிட வேண்டுமென்று கூறப்படுகிறது. இவ்விதம் செய்யின உலகிலே மிகவும் பொருளாதார பலங்கொண்ட நாடாக பிரிட்டன் இருக்கலாமென்றும், அமெரிக்காவின் ஒத்துழைப்பு இல்லாது விட்டாலும் பரிட்டன் அமெரிகக டாலர்களையும் மீறக் கூடிய புதிய நாணய நோட்டுக்களை அபிவிருததி செய்ய முடியுமென்றும சுரங்கங்களில கிடக்கும் தங்கங்களைச் சேகரித்து ஒரு பிரிட்டிஷ் காமன்வெல்த் வங்கியை நிறுவிக் கொண்டு புதிய சாம்ராஜ்ய நாணய நோட்டுகளை விநியோகிகக வேண்டுமென்றும் தென்னாப்பிரிக்க பொருளாதார நிபுணர்கள் நம்புகின்றனர்.

இத்திட்டம் சர்வதேச ஒத்துழைபபைத் தேடிக்கொடுக்குமென்றாலும உலகிலுள்ள முக்கிய தங்கத்தையுடைய பிரதேசங்கள் பிரிட்டிஷ் அதிகாரத்துள் இருப்பதால் பிரிட்டன் தனிமையில் இதனைக் கையாள முடியுமென்றும் தென்னாப்பிரிக்க பொருளாதார நிபுணர்கள் கருதுவதுடன் மார்ஷல் திட்டததுக்கு இது மாற்றாகவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

காமன்வெல்த் நாடுகள் வங்கி காமன்வெல்த் நாடுகளிடமிருந்து தங்கதை வாங்கி அவற்றுக்கு நாணய நோட்டுகளை ஸடெர்லிங பிரதேச நாடுகள் முழுமைக்கும் விநியோகிக்கும். பிரெட்டன் வூட்ஸின் திட்டத்துக்குப் பதிலாக உலக தங்கம கடன் கொடுக்கும் வங்கி திட்டம் வருமென்றும, உலகமுழுமையும சுரங்கங்களிலுள்ள தங்கங்களைச் சர்வதேச பொருளாதார நிதி எடுக்குமென்றும் கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது

வான்கூவர், அக் 2

பிரிட்டிஷ் கொலம்பியாவில் பிரின்ஸ் ரூபர்ட் என்னுமிடத்தில் பழைய கற்பாறைகளிடையே தற்செயலாசஒரு வான்கூவர் மனிதனால் தங்கம் கண்டுபிடிககப்பட்டது. இதனால் இப்பகுதிக்கு பெருந்தொகையான மக்கள் போகத்தொடங்கிவிட்டனர். திரு. எம். ஷன்னான் கண்டுபிடித்த தங்கம் பற்றிய செய்தி எங்கும் பரவியது. இங்குள்ள தங்கம் டன்னுக்கு 18,170 பவுண மதிப்பிடபடுகிறது. இங்கு வேலைகள் திட்டப்படி எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு நாடுகளுக்கு அமெரிகக தங்கம்

ஷாஙெனன், அக். 2

நியூயார்க்கிலிருந்து கல்கத்தாவுக்கு லட்சக்கணக்கான டாலர் மதிபபுள்ள தங்கத்துடன் சென்ற விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக இங்கு தங்கவேண்டி ஏற்பட்டதால் சுமார் 18 மணி நேரத்துக்கு இத்தங்கத்தை போலிஸார் காவல்புரிய வேண்டி ஏற்பட்டது. ஹ காங் அன் ஷாங்கை பரங்கிங் கார்ப்பரேஷனுக்கு அரை டன்னுக்கு மேற்பட்ட தங்கமும் சாட்டர்ட் பாங்க் ஆப் இந்தியா, ஆஸ்திரேலியா அன்சைனுவுக்கு சுமார் 60 ஹத்தல் தங்கமும் இந்த விமானத்தல் இருந்தது.

எகிப்து - ஜப்பான் பண்டமாற்று உடன்படிக்கை

கெய்ரோ, அக் 2

ஜப்பானிலும் எகிப்திலும் உள்ள அமெரிக்க அதிகாரிகளிடையே பண்ட மாற்று சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் கொள்கையளவில் முடிந்து ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுவிட்டது.

எகிப்தியப் பருத்தி ஐவுளி வகைகள்

கெய்ரோ, அக். 2

எகிப்திலிருந்து 50 லட்சம் மிட்டர் பருத்தி ஐவுளி வகைகள் ஏற்றுமதி செயயக்கூடிய வழிவகைகள்பற்றி ஆலோசிகக ஒரு விசேட கமிட்டி நியமிக்கப்பட்டது. (ராய்ட்டர்)

பிக்பெக்கட் ஆசாமி பிடிப்பட்டான்

கொழும்பு, அக். 1

யாழ்ப்பாணத்தில் இருந்து தனது இரையைக் கண்ணுங் கருத்துமாகத தொடர்ந்து வந்த ஒரு பிக் பாக்கெட் மீரிகமாவுக்கும் பல்லெவலைக்கும் இடையில் வைத்து ரயில்வேப் பாதுகாப்பு அதிகாரிகளால் பிடிக்கப்பட்டான்.

தனது ஜேப்படி ஜாலவித்தையைப் பிரஸ்தாப பிக்பாக்கட் காட்டியதும்அதற்காளான பிரயாணி அபாயச் சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தி விட்டார். உடனே பிக்பாக்கட் குதித்து ஓடப் பார்த்தான் இதற்கிடையில் அதிகாரிகள் அவனை ஓடிப்பிடித்து விட்டார்கள்.

தமிழ் நாட்டுக்கு நியாயமான எல்லைகள்

தமிழர் கட்சியை எடுத்துரைக்க கமிட்டி அமைப்பு

ஸ்ரீ முத்துரங்க முதலியார் வேண்டுகோள்

சென்னை, செப். 30

ஸ்ரீ. சி. என். முத்துரங்க முதலியார் எம். எல். சி, இன்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிப்பதாவது:--

"ஆந்திரா மாகாண பிரிவினை விஷயத்தை வெகு சீக்கிரத்தில் எடுத்துக் கொள்ளலாம். சரித்திர பூர்வமாக தமிழரைச்சேர்ந்ததும், பெரும்பான்மையில் தமிழர் உள்ளதுமான பிரதேசங்களை ஏற்கனவே ஆந்திரர்கள் பேராசை பிடித்து கேட்டுக் கொண்டிருக்கின்றனர். தமிழர்கள் கடமையைச் செய்ய முன் வந்து தங்கள் கட்சியை எடுத்துரைத்தாலொழிய அநேக பிரதேசங்களிலுள்ள தமிழர்கள் கஷ்டப்பட நேரிடும். தமிழ் நாட்டுக்கு நியாயமானதும், உண்மையானதுமான எல்லைகள் கிடைக்கச் செய்ய ஜனத்தொகை ஜாபிதா தயாரித்து நம் கட்சியை எடுத்துரைக்க, இந்த விஷயத்தில்அக்கறைகொண்டுள்ள அநேகருடன் கலந்தாலோசித்து கீழ்கண்ட தற்காலிக கமிட்டி அமைக்கப் பட்டிருக்கிறது. இன்னும் சிலரை அங்கத்தினர்களாய் சேர்த்துக் கொள்ள கமிட்டிக்கு அதிகாரம் உண்டு. தமிழர்கள் என் வேண்டுகோளுக்கு இணங்கி கமிட்டியுடன் மனப்பூர்வமாக ஒத்துழைப்பார்களென்பது நிச்சயம்.

கமிட்டி அங்கத்தினர்கள் பின் வருமாறு:- ஸ்ரீமான்கள் சி. என். முத்துரங்க முதலியார், வி. எஸ். தியாகராஜ முதலியார், ஆர். மூர்த்தி, அருள்மரி நாதன், ஆர். நாகராஜன். (காரியதரிசி)

"நேருஜி இருக்க நமக்கென்ன பயம்?"

எதிர்காலம்பற்றிஸ்ரீஷண்முகம்செட்டியார்

இந்திய நிதி நிலைமை ஸ்திரமாயிருக்கிறது

பம்பாய், அக். 1

"இந்தியாவின் நிதி நிலைமை அடிப்படை ரீதியிலும் பிரதானவகையிலும் ஸ்திரமாகவே இருக்கிறது" என்று இந்திய நிதி மந்திரி ஸ்ரீ. ஆர். கே. ஷண்முகம செட்டியார் தெரிவித்தார்.

பம்பாய் இந்திய வர்த்தக சபை இன்று மாலை நிதியமந்திரிகக்கும் வர்த்தக மந்திரி ஸ்ரீ. பாபாவுக்கும் ஒரு வரவேற்பு அளித்தது. இக்கூட்டததில் ஸ்ரீஷண்முகம் செடடியார் மேலும் தெரிவித்ததாவது:-

"யுததத்தால் சீர்குலைந்துள்ள உலகததில் அநேக தேசங்களின் நிதி அடிப்படைகளெல்லாம முறிந்துபோயிருக்க, நம்முடைய தேசத்தின் நிதி நிலைமை ரொம்ப ஸ்திரமாகவே இருக்கிறது. கடன் வாங்குவதற்கான சக்தி அமெரிக்காவுக்கு உள்ளதைப் போல நமக்கும் அவ்வளவு ஸ்திரமாக ஆருக்கிறது."

ஆகஸட் 15-ம் தேதிக்குப் பின் இந்தியாவின் அரசியல், பொருளாதார, சமூக தொழில் அமசங்களைக் குறித்து நிதி மந்திரி பேசுகையில் தெரிவித்ததாவது:-

"ஆகஸ்ட் 15-ம் தேதி நடந்திருக்கிற சம்பவத்தின் மகத்துவததை நாம் உணர நீண்டகாலம் பிடிக்கும். அன்றைய தினம் தான் இந்தியாவில் ஜன நாயகம் ஸ்தாபிககப்பட்டது. தேசததின் மந்திரிக்கும் சாதாரண மனிதருக்கும் வித்தியாசம் கிடையாது. கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டனை 'பண்டித மவுண்ட் பேட்டனுக்கு ஜே' என்று மகிழ்ச்சியுடன் கோஷமிட்ட நாள் அன்றைய தினம்தான்.

உலகத்தில் எந்த பகுதியிலும் எந்தசர்க்காரும் ஏற்பட்டிராதஒரு பெரிய நெருக்கடி சமயததிலும், பண்டித நேருகொஞ்சம் கூட நிதானம் தவறாது மட்டுமன்றி உயர்ந்த நோக்கமுடன் நடந்துகொள்கிறார். இத்தகையவரை தலைவராயக் கொண்டிருக்கும் பாக்கியத்தைப் பெற்றுள்ள ஒரு தேசம் தன் வருங்காலததைப் பற்றி கவலையடைய வேண்டியதில்லை.

தனக்கு வேண்டிய பூராஉணவையும் இத்தேசமே உற்பதி செய்துகொள்ள வேண்டுமென்று மகாத்மா காந்தி கூறுவதை நான் பூரணமாக ஒப்புக் கொள்கிறேன்.

இதே சமயத்தில் தொழில் வகையிலும் நாம் முன்னேற வேண்டும். தொழிற் சாலைகளை தனிப்பட்டவர்கள் இன்னும் அநேக வருஷகாலம் நடத்தவேண்டி ஏற்படும். எந்த வரி விதிப்புகொள்கையை சர்க்கார் அனுஷடித்தாலும் தனிப்பட்டவர்கள் தொழிற்சாலை நடத்துவதற்கு குந்தகம் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது என் கடமை.

முதலாளிகள் எனப்படுவோர் இந்த தேசத்தில் எவரையுமே முதலாளி என்று சொல்லுவதற்கில்லை. தனிப்பட்டவர்கள் நடத்தும்தொழிற்சாலைகள் ஓரளவுக்கு சர்க்காரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்க சம்மதித்தாக வேண்டும்.

மேற்கு ஐரோப்பா சுடுகாடாகும்

இன்னுமோர் யுத்தத்திற்கு இடம் கொடாதீர்

அமெரிக்காவுக்கு அறிஞர் ரசல் எச்சரிக்கை

லண்டன், செப். 30

பெர்ட்ரான்ட் ரசல் கூறுவதாவது:-

அணுகுண்டு சக்தி கட்டுப்பாடு சம்பந்தமாக அமெரிக்கா தனக்கு ஆபத்து நேரிடாதவாறுள்ள கோரிக்கைகளை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. ரஷியாவை விட ஏராளமான அணு குண்டுகள் தயாராகிவிட்டால, சைனா, பாரசீகம், கிரீஸ், வட அமெரிக்கா முதலியவைகளும் அணு குண்டுகள் வேண்டுமென்று கோரும். அப்பொழுது அமெரிக்கா ஆட்சேபிக்க முன்வரின் யுத்தம் ஏற்படக்கூடிய அபாயம் நேரிடும். யுத்தம் ஒன்று நேரிடக் கூடியதாக இருந்தால் அது இப்பொழுதே நேரிட வேண்டுமென்றே அமெரிக்கர்கள் கருதுகிறார்கள். ஏனெனில் இப்பொழுது அவர்களுக்கு அனுகூலமான நிலைமை இருந்துவருகிறது. இன்னொரு யுத்தம் நிகழுமாகில், மேற்கு ஐரோப்பா முழுவதும் சுடுகாடாகிவிடும். யுத்தம் நேரிடாதபடி அமெரிக்கா தனது நடவடிக்கைகளைக் கையாள வேண்டும். இதுவரை யுத்தம் நேரிடாதவாறு தடுத்து வருவது ரஷியா ஒன்றுதான் என்றே சொல்லவேண்டும்.

ஐரோப்பா பயணம் ரத்து

வாஷிங்டன், செப். 29

அமெரிக்க ராணுவக் கமிட்டியின் ஐரோப்பா பயணம் ரத்து செய்யப்பட்டு விட்டது. அதில் ஒரு அங்கததினர் செல்லமுடியாதிருப்பதால் பயணம் ரத்தானது என்று காரணம் கூறப்படுகிறது.

கிரீஸில் அமெரிக்க ராணுவம் தலையீடு

ஏதென்ஸ், செப். 30

அமெரிக்க ராணுவ தகவல் தலைமை அதிகாரி கிரீஸுக்கு வந்திருக்கிறார். கிரேக்க கொரில்லாகளை முறியடிக்கும் கிரேக்க சர்க்கார் ராணுவத்துடன் அமெரிக்க ராணுவ அதிகாரிகள் சேர்ந்து யுத்தம் செய்ய வேண்டுமென்று அவர் கருதியதால் அபபடிச் செய்யும்படி அமெரிக்க சர்க்கார் அமெரிகக யுத்த இலாகாவுக்கு உத்தரவிட்டிருக்கின்றனர். கிரீஸிலிருந்து பிரிட்டிஷ் ராணுவம் வெளியேறுவது சம்பந்தமாக இன்னும் முடிவு ஏற்படவில்லை.

இத்தாலியின் குடியேற்ற நாடுகள்

லண்டன், செப். 30

நான்கு வல்லரசுகளின் உதவி அந்நிய நாட்டு மந்திரிகள் விசேஷ மகாநாடு அடுத்த வெள்ளிக்கிழமை இங்கு ஆரம்பமாகும். சோவியத் சர்க்கார் மகாநாட்டில் கலந்துகொள்ள இணங்கிவிட்டார்கள். ஆப்பிரிக்காவிலுள்ள இத்தாலிய மாஜி குடியேற்ற நாடுகளான எரிரனேய்க்கா, திரிப்போலிட்டானு, எரிட்ரியா. இத்தாலிய சோமாலிலந்து ஆகியவைகளின் எதிர்கால நிலைமைபற்றி அவைகளை ஐக்கியதேச தர்மகர்த்தா கமிட்டி நிர்வாகத்தில் சேர்ப்பதுபற்றியும் ஆலோசிக்கப்படும். அங்குள்ள நிலைமையை ஆராய ஒரு கமிஷன் அனுப்புவது பற்றியும் முடிவு செய்யபபடும்.

ஆஸதிரிய உடன்படிக்கை

வியன்னு, செப். 30

ஆஸ்திரிய சமாதான உடன்படிக்கை தயாரிப்பது சம்பந்தமான கமிஷன் நாளை தனது வேலையை முடிக்கும்.

இளைஞன் ரயிலில் மோதுண்டு மரணம்

கொழும்பு, அக். 2

சமூனி ஃடேவுனுக்குச் சமீபத்தில் திங்கட்கிழமை பேலியகொடையைச் சேர்ந்த எஸ். ஜோஸப் பெரேரா (17 வயது) என்பவர் டீஸல் ரயிலினால் மோதுண்டு மரணமடைந்தார் என்று அறிவிக்கப்படுகிறது. ஸதலத்தில் மரண விசாரணை அதிகாரி விசாரணை நடத்தினார்

ஆலயத்தில் கொலையும் களவும்

ஐவருக்கு மரண தண்டனை

கொழும்பு, அக். 3

கொழும்பு அசைஸ கோர்ட்டில் நீதிபதி திரு ஜயத்திலகா முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்கில், கடந்த வருடம் மார்ச் மாதம் 5-ம் தேதி இரவு குடபுத் கமுவா புத்த ஆலயத்தில் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி, அங்கிருந்த ஆயுர்வேத வைத்தியர் டபிள்யூ. கே சோமபாலா என்பவரைக் கொலை செய்து அந்த ஆலயத்தில் களவாடியதாக எச். சைமன் சில்வா என்னும் சஹப்தீன் எச். என். அமரதாச, டபிள்யூ. எஸ். மரதேலிள் என்னும ஆனரத்ன, எல். பீட்டர்சில்வா டபிள்யூ. சார்ள்ஸ சில்வா, ஆர். பி. குணபாலா ஆகியவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையின்போது எதிரிகளில் ஒருவரான எல். பீட்டர் சில்வா என்பவருடைய ருகுணபஸகொராளா ஹோட்டலில் வேலை செய்யும் சிப்பந்தியான ஆர். பி. குணபாலா குறறவாளியல்லவெனறுகண்டு விடுதலை செய்யப்பட்டார். மற்ற ஐந்து எதிரிகளுக்கும் நீதிபதி மரண தண்டனை விதித்தார்.

விசாரணையின் போது பிராஸிகியூஷன் தரப்பில் பிரஸ்தாபநபர்கள் குடபுத்கமுவா புத்த ஆலயத்துக்குச் சென்று அங்கிருந்த சோமபாலா என்பவரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டு ஆலயததின் புத்தகுருவுக்கும் சோமபாலாவுக்கும சொந்தமான ரூ. 15,000 மதிப்புள்ள நாணய நோட்டுகள், சவரன்கள், வெள்ளி நாணயங்கள் முதலியன வற்றை திருடியதாகவும், இவர்கள் தங்களுடன கொண்டுவந்திருந்த கயிற்று வடம் ஒன்றை பின்னே விட்டுச்சென்றதினால் போலிசாருக்கு எதிரிகளைப் பிடிப்பதற்கு அது உதவியாக இருந்ததெனறும் கூறப்பட்டது. கயிற்றுவடத்தின் ஒரு பகுதியில் மாதானையில் உள்ள ருகுணபஸ்கொராளா ஹோட்டல் பெயர் இருந்ததினால் போலிசார் அங்கு சென்று குற்றவாளிகளைக் கைதுசெய்ய முடிந்தது.

லண்டனில் இந்தியக் கலைக்காட்சி

மேரி ராணி பார்வையிட்டார்

லண்டன், அக். 1

இன்று மேரி ராணியார் லண்டனில் உள்ள விக்டோரியா-அல்பர்ட் பொருட் காட்சிச் சாலைகளு விஜயம் செய்து, இங்கு புதிதாகத் திறக்கப்பட்டிருக்கும் "இந்தியச் சிற்ப" சம்பந்தமான கண்காட்சியை பார்வையிட்டார்.

கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிர வருஷங்களின் முன்னையதான இந்து நதிப் பள்ளத்தாக்குக் கலைப்பொக்கிஷங்கள் முதல் 19-ம் நூற்றாண்டுப் பொருட்கள்வரையும இக்கலைக்காட்சியில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. [ராய்ட்டர்]

கிழக்கு நாடுகளுக்கு அமெரிகக தங்கம்

ஷாஙெனன், அக். 2

நியூயார்க்கிலிருந்து கல்கத்தாவுக்கு லட்சக்கணக்கான டாலர் மதிபபுள்ள தங்கத்துடன் சென்ற விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக இங்கு தங்கவேண்டி ஏற்பட்டதால் சுமார் 18 மணி நேரத்துக்கு இத்தங்கத்தை போலிஸார் காவல்புரிய வேண்டி ஏற்பட்டது. ஹ காங் அன் ஷாங்கை பரங்கிங் கார்ப்பரேஷனுக்கு அரை டன்னுக்கு மேற்பட்ட தங்கமும் சாட்டர்ட் பாங்க் ஆப் இந்தியா, ஆஸ்திரேலியா அன்சைனுவுக்கு சுமார் 60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

பந்து மித்திர மந்திரி சபை

தந்தை, மகன், மருமகன் ஆட்சியா?

தேவலோகத்தில் இலங்கை அரசியல் பரிசீலனை

'ஹெலதிவ' (28-9-47) என்னும் சிங்களப் பத்திரிகையில் "சீனக் கண்ணாடி" பின்வருமாறு எழுதுகிறது:-

தேவலோகத்திலே, தேவேந்திரன் தனது அட்டவணையில் உள்ள சுற்றுப் பிரயாணங்களை ரத்துச் செய்துவிட்டு உடனே தேவர்கள் சபையைக் கூட்டுமாறு, திடீரென பின்வரும் உத்தரவைப் பிறப்பித்தார்.

"நரலோகத்திலே, ஈழமண்டலத்திலே சோலபா எனும் பெயருடைய அரசியல் திட்டத்தை அமுல் நடத்த தன விருப்பப்படி நிறுவியிருக்கும் மந்திரி சபைக்கு ஆரோக்கியத்துடன் நீடிய ஆயுளையும், மகாஜனங்களின் நலனெண்ணத்தையும் தந்தருளுமாறு, ஈழ மண்டலத்து புதிய பிரதம மந்திரி செங்கடகலபுரத்து தலதா கோபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீசாந்தமூர்த்தியிடம் வரம் கேட்டாராம்.

ஆனால் ஈழமண்டலத்து மகாஜனங்கள் எனக்கு அனுப்பியிருக்கும் விண்ணப்பத்தில், தேசத்தின் பெரிய ஓர் காரியத்தை கையாளுவதில் யார் யாரிடம் ஏரம் கேட்க வேண்டும்? யாருடைய ஒத்துழைப்பைத் தேடவேண்டும்? எதற்காக வரம்? அவ்வளவெல்லாம் அவசரமென்ன? கைகூப்பி தண்டமிட்டுவிட்டால் காரணமின்றி நம்பிவிடலாமா? என்றெல்லாம் பல பிரச்னைகளை எழுப்பியிருக்கிறார்கள். மேலும் திரு சேனநாயக்கா உயிருடன் தேவலோகம் வர முயற்சிப்பதாகவும், அவரின் அரசாங்கத்திற்கு உதவியாக ஒரு ஐந்தாம் படையும் வேலைசெய்து வருவதால் இலங்கை மகாஜனங்களுக்கு அங்கேயல்ல நேசதேச எதாபனத்திலும கூட நம்பிக்கையிலலையாம். எனவே அவர்கள் எமது உதவியை நாடியிருக்கிறார்கள்.

ஆனபடியால் இன்று கூடும் சபைக்குள் எவருமே நிருபர்கள்கூட உள்ளே வரவொட்டாது வாயிற்கதவை மூடி இரட்டைக தாழ்ப்பாளிட்டுவிடவேண்டும்!

குறிப்பு: ஈழமண்டலத்து அரசாங்கதைப போன்று இவ்வளவெல்லாம் பெரிய பிரச்னைகளை சில நிமிஷ நேரங்களில் பரிசீலனை செய்து தீர்மானிக்க, நமக்கும் முடியுமா என்றும் ஆலோசிக்கப்படும்.

சபை கூடியது; தேவர்களெல்லோரும அவரவர் ஆசனங்களில் அமர்ந்துகொண்டு ஈழமண்டலத்திலிருந்து வந்த வதந்திகளைப்பற்றி பிரஸ்தாபித்துக்கொண்டிருந்தார்கள். தேவேந்திரன் சபைக்குள் வந்தபோது உதயியோக தோரணையில் தேவர்களை மரியாதை செய்யவில்லை. காரணம்: தேவேந்திரன் வெள்ளை துகிலணிந்து ஆடம்பரமின்றி வந்ததுதான்.

தேவேந்திரன் அக்கிராசனத்தில் உட்கார்ந்துகொண்டான். தேவர் சபை உடனே அஷ்டலோககமிட்டியாக மாறியதும் அட்டவணையில் உள்ள அலுவல்களை கவனிக்கத் தொடங்கின.

இந்தச் சமயத்தில் சிறிது பரபரப்பு உண்டானது. இரட்டைத தாழ்ப்பாளிட்டு இருந்தபடியால ஒருவரும் அதை லட்சியம் பணணவில்லை.

ஈழமண்டலத்திலிருந்து மிகவும பராக்கிரமம் வாய்ந்த பிசாசு ஒன்று வந்து, தேவர்கள் சபைக் கதவை தடார் படாரென்று அடித்து தடபுடல்பண்ணிகொண்டிருந்தது.

காரியத்தில் கண்ணுயிருந்த தேவேந்திரன், "யாரடா முட்டாள்டயமல, கதவை உடைக்கறது" என்று அதகாரத தோரணையில் கோபத்துடன் வினவினான்.

இவற்றையெல்லாம் சீனக் கண்ணாடியில் பாரத்துக்கொண்டிருந்த ஹநுமந்தன் ஒரே பாய்ச்சலில் தாவி வந்து, திறப்புத துவாரத்தின் வழியாக நுழைந்து தேவ மந்திரதிற்குள் சென்று தேவேந்திரனுக்கு தண்டநமஷகாரம் செய்ததும், உடனே வெளியே நிற்கும் பிசாசை உள்ளே வர அனுமதிக்கும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொண்டான். அருகிலிருந்த மின்சார பொத்தானை அமுததவேபிசாசு தேவேந்திரன் முன வந்து அஷ்டாங்க நமஷகாரம் செய்தது. பதறிக்கொண்டிருந்த பிசாசை வந்த காரணமென்னவென்று தேவேந்திரன் கேட்டான பிசாசு சொலலத் தொடங்கியது:-

"பகவத் சக்ர தேவேந்திர யாநனி! சிறீ லங்கா பாராளிமெண்டு தேர்தல் இப்பொழுது முடிந்துவிட்டது. திரு சேனநாயககாவை பிரதம மந்திரியாக்கி, அவரை மந்திரி சபையை நிறுவும்படி கவரனர் உததரவிடடார். உடனே திரு சேனநாயக்கா செங்கடகலபுரத்துதலதா கோபுரதில் வீற்றிருக்கும புத்தரின் பரிசுதத தந்தகதன் முன்னிலையில் தண்டமிட்டு மலர் பொழிந்து தீபமேற்றி பஞ்சசீலம் அனுஷ்டிதத பின் திரு சேனநாயக்கா பின்வருமாறு பிராததித்தார்:-

தன் அருமந்த மகன் டட்லி சேனநாயக்காவுக்கு விவசாய மந்திரிப் பதவியும், தன் அன்பான மருமகன் கொத்தலாவலை வீரனுக்கு போக்குவரத்து மந்திரிப் பதவியும், பொது வாக்காளர்களில் ஒருவருடைய சம்மததையாவது பெற முடியாத அவர் ஒலிவர் குணதிலகவுக்கு உள்நாட்டு நிர்வாக மந்திரிப் பதவியும், நார் பட்டையென்று பெயர் வழங்கும் ஜே ஆர். ஜயவர்தனவுக்கு பொக்கிஷதின் தறப்பையும் மற்றும் புலாங்குளமே, கோட்டாபய ஆகிய சொந்தக்காரர்களுக்கு ஏதாவது பதவியும், வவுனியா சுந்தரலிங்கம் அய்யாவுக்கு கடைச் சந்தி மந்திரிப் பதவியையும், மன்னார் சிற்றம்பலம் அய்யாவுக்கு தந்திக் கம்பத்தையும் ஒப்புக்கொடுக்க கிருபைசெய்யவேண்டுமென்று வேண்டினார்.

இது மாத்திரமல்ல, திரு சேனநாயக்கா ஆகாயவசனிமூலம் நிகழ்த்திய சொற்பொழிவில் பிரிட்டிஷ் சாமராஜ்யத்துக் கீழ் ஒருவகையான சுதந்திரம் கடைக்கப் போகிறதென்று அந்தச் சுதந்திரமும நிபந்தனையின் பேரில கடைக்குமென்றும அந்த நிபந்தனைகளை திரு சேனநாயக்காவன சட்டைப் பையில் வைததுக்கொண்டு, அதை பார்லிமெணடிலதான வெளியே விடுவாரென்றும், அந்த நிபந்தனைகளின்படி இலவகை மகாஜனங்கள இந்த அரைக்கால் சுதந்திரத்தை மனமுவந்து ஒபுகொள்ள வேண்டுமென்றும குறிப்பிடடார்.

கவர்னரைக் கண்டபின் அரசியலபறறி ஐந்து-ஆறு கூடத தெரியாத பாதக்கார கும்பலகளால், திரு சேன நாயககாவை கண்டியிலிருந்து பொரலகனதத மாயானம வரையும ஊரவலமாக அழைததுச் செலலப்பட்டாரென்றும் மேலும அந்தப் பிசாசு அறிவித்தது.

இவை எலலாவறறையும் கேட்டு தலைவலி பிடித்த சகர தேவேந்திரன், தன் நெற்றிக்கு ஏழு எடடு அடி கொடுத்து இனிமேலும இந்த அநியாயதைகேட்க செவி சாய்க்க முடியாத காரியமென்றும், அய்யய்யோவென்று ஒரு பெரிய நெடுமூச்சு விட்டான். தேவர்களும நெடுமூச்சு விட்டார்கள். இந்த அக்கரமங்களையெலலாம பரிசீலனை பணணி நியாயம வழங்க ஸ்ரீமத கணேஷனுக்குதான் முடியும். என்று அஷடலோக கமிடடி முடிவுசெய்தது. அதன்படி அந்த பணியை கடைக்கார பிசாசை ஸ்ரீமத கணேசனிடம் அழைததுபபோகுமபடி வநது நிந்தனுக்கு தேவேந்திரன் உததரவிடடான.

ஸ்ரீமத் கணேசர் அந்தப் பிசாசை முறையீடுகளையலலாம ஒபுகொணடு, சேனநாயககா அரசாங்கதின பரம ஆயுள் மூனறு மாதமென்றும், அதன பின் திரு பண்டாரநாயககா தான இலவகையன பரதமமந்திரியாவாரென்றும ஆனபடியால இலவகைமக்களை எதறகும அவசரபபடடுவிட கூடாதென்றும தரிசலக சாஸ்திரி புலதசிங்கா அவர்களை தொடுகுறி சாஸதிரததனபடி எதிகாலததைப் பற்றி திருவாய்மலர்ந்தருளினார்

இவை யெல்லாவறறையும கேடட அந்தப் பிசாசு மடடறற மகழச்சியுடன ஆனந்த சாகரதில நீநது வந்து தேவலோக செய்தியை இலவகை மககளுக்கு அறிவித்தது.

குடியேற்றத்தைத் தடுக்க வேண்டும்

அசெம்பிளியில் அரேபிய நாடுகளின் தீர்மானம்

பாலஸ்தீன தகராறு

நியூயார்க், செப். 30

பாலஸ்தீனத்தில் குடியேற்றத்தைத் தடைசெய்ய வேண்டுமென்று இன்று எகிப்து, ஈரான், லெபானன் பிரதிநிதிகள் ஐக்கிய தேச அசெம்பிளியில் திடீரென ஓர் தீர்மானம் கொண்டுவந்தனர். குடியேற்றப் பிரச்னையால் பல நாடுகளுக்குள் தகராறுகள் ஏற்படுவதால உலக அமைதியின் பொருட்டு குடியேற்றம் சம்பந்தமாக சர்வதேச ஒக்துழைப்புத் திட்டம் அவசியமென்று அவர்கள் வற்புறுததினார்கள்.

ஆசி பிரதமர் அளப்பு!

கான்பெரா, செப். 30

பிரிட்டன் பாலஸ்தீனத்தைக் கட்டி ஆளுவது இயலாத காரியமென்று தான சென்ற வருடமே சாம்ராஜ்ய பிரதமர்களிடம் தெரிவித்ததாக இன்று ஆஸ்திரேலிய பிரதம மந்திரி சீ.லி கூறினார். பாலஸ்தீனத்திலிநது பிரிட்டிஷ் துருப்புகளை வெளியேற்றுவதே உசிதமானதென்று தெரிவித்தார்.

வெடி சப்தம்

ஜெருஸலேம், செப். 30

இரு தடவை வெடி சப்தம் கேடகவும் அபாய சங்குகள் ஊதப்பட்டன. ஜாபா கோடடை வாசலில் புகை கிளம்பவே இன்று பேலிஸார் அவ்விடதிற்கு விரைந்து சென்றனர்.

[ராய்ட்டர்]

இலங்கை கொக்கோவுக்கு அதிக கிராக்கி

இங்கு உற்பத்தி வெகுவாய் பாதிக்கபபட்டுள்ளது

கொழும்பு, அக். 2

இலங்கையில கொக்கோ உற்பதது வெகுவாகப் பாதிக்கபபடடுள்ளது. உலக மார்க்கெட்டில இலவகைக கொகககோவுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சமீபததில ஏற்பட்ட வெள்ளப் பெருக்கும் வருட ஆரமபததல இருநத வறசியும் கொகககோ உற்பததியை வெகுவாய் பபாதித்துள்ளது மேலும் இலவகை சர்ககார சில பெரிய கொகககோ உற்பதது எஸடேடடுகளை வேறு வேலைகளுக்காக எடுபபதினால கொகககோ உற்பதது மேலும் பாதிககபபடும என்று கூறபபடுகிறது.

இலவகையில் வருடத்துக்கு மேலதிகமான கொகககோ 2,000 டன்களையும சர்வதேச அவசர கால உணவுச் சபை ஆஸதிரேலியா, நியூஜலாந்து, தென்னாப்பரிக்கா, சுவீடன, சுவிடஸர்லாந்து, எகிபது, இந்தியா, பாலஸதீனம், பிலிபபைன, துருகக ஆகிய நாடுகளுக்கு ஒதுககியிருநதது இதில எகிபதும், பிலிபபைனுமே பெருந்தொகையைப் பெற்றன. இலவகைக கொகககோவுகுகுகடைததவலல திருபதிகரமானதென்று கூறப்படுகிறது இடபொழுது வெளியிடங்களிலிருந்து கொகககோ வெைடுமவென்று ஆடடர்கள வநதுளளன. கிராக்கி மிக அதிகமாக இருக்கிறது.

ஆஸ்திரேலிய கப்பல் வேலை நிறுத்தம்

தொழிற் சங்க காங்கிரஸின் பலத்த எதிர்ப்பு

மெல்போர்ன், அக். 1

ஆஸதிரேலியக் கப்பல் எஞ்ஜினீர்களின் வேலை நிறுததம ஒன்று ஆரம்பித்துள்ளது இதன் காரணமாக 101 ஆஸதிரேலியக் கப்பல்கள் பாதிக்கப்படும் என்று தெரிகிறது.

900 எஞ்ஜினீர்கள் சம்பந்தப்பட்ட இவ்வேலை நிறுத்தம் நேற்று நள்ளிரவில் ஆரம்பித்தது. வேலையில் இருந்து விலக்கப்பட்ட ஒரு எஞ்ஜின் ரூம் சிப்பந்தியை வேலைகத் திநப்பி எடுததததாலேயே எஞ்ஜினீர்கள் மேற்படி வேலை நிறுததத்தை ஆரம்பித்ததாகத் தெரிகிறது.

ஆஸதிரேலிய தொழிற் சங்க காங்கிரஸ இநதத் தவறுதலான வேலை நிறுததம ஆரம்பித்தால தாமகப்பலுக்கு வேண்டிய எஞ்ஜினீர்களைத் தந்து உதவுவோம் என்று சென்ற வாரம எச்சரித்துள்ளது.

வேலை நிறுத்தம் சமரசமாகத் தீர்க்கப்பட்டது என்று பிரதம மந்திரி சீப்லி அறிவித்தார்.

(ராய்ட்டர்)

லண்டனில் பர்மா மகாநாடு

பர்மா அரசியல் நிர்ணய சபைக்கு பிரதமர் அட்லி பாராட்டு

லண்டன், செப். 30

பிரதமர் அடலியும் மந்திரசபையின் வேறு சில அங்கத்தனரும் பர்மாப பொருளாதார மந்திரி உடினடுட தலைமையில் வந்த பர்மியத் தலைவர்களும் பாமாவன எதிர்காலம பறறி ஒரு முக்கிய மகாநாட்டை இன்று நடததினர். இமமகாநாட்டில போது, பிரதமர் அட்லி பர்மா அரசியல் நிரணயசபை அதிசீக்கிரமாகவே தன் கடமைகளை நிறைவேற்றி ஒரு அரசியல திட்டததைத் தயாரித்து வடடதறமையை வியந்து பாராட்டினார்.

[ராய்ட்டர்]

எகிப்தில் காலரா நிலைமை

கெய்ரோ, அக். 1

எகிப்தில் 8 நாட்களாக காலரா நோய் பரவி வருவதைத் தடுக்க எல்லா இடங்களிலிருந்தும் மருந்து அனுபபபபடுகிறது. அந்நிய விமானப் போகககு வரத்து, கப்பல் போக்கு வரதது தடைப்பட்டிருக்கிறது. சென்ற 24 மணி நேரததில 76 போகளுக்கு காலரா கண்டு 57 பேர்கள இறந்து போனார்கள். மற்ற நாடுகளுககு நோய பரவாமல் தடுகக அவைகள் நடவடிககை எடுததது வருகின்றன. பிரிடடன், அமெரிக்கா, பிரான்ஸ், தென்னாப்பிரிக்கா, பாலஸதீன, ஈராக முதலிய நாடுகள் எகிபதுக்கு காலரா மருந்து அனுப்புகின்றன.

ஹிஜாஸில் காலரா இல்லை

லண்டன, அக். 1

ஹிஜாஸில் காலரா நோய் பரவியுள்ளதாக வெளிவநத செயதி உணமையல்லவென்று சவூதி அராபிய சர்ககார அறிவிக்கின்றனர்.

பாரசீகத்தில் பூகம்பம்

நூற்றுக்கணக்கான மக்கள் மாண்டனர்

டெஹ்ரான், செப். 30

பாரசீகததில வட கீழ் மாகாணததில உள்ள டூஸ்தாபாட் எனனும் இடததில பயங்கரமான ஒரு பூமி அதிர்ச்சி ஏறபட்டது. மேறபடி அதிர்ச்சி ஏறபடட எதலம் சோவியத ரஷயாவின் எலலையில் இருகககிறது.

இவ்வதிர்ச்சியின் காரணமாக 120 பேர் மாண்டு போனார்கள் இனனும 300 பேர் காணாது போயவிட்டார்கள். இவர்களும அநகமாக இறந்து போயிருககலாம் எனறே எணணப்படுகிறது. பூகமபதினை காரணமாக போகககு வரவு முதலியவை பெரிதும பாதிককபபடடுளளன.

(ராயடடர்)

கோவிலைத் திறவுங்கள்

ஹரிஜன சங்க வேண்டுகோள்

கொழும்பு, அக். 1

கடந்த 28-9-47 ஞாயிறுக்கிழமை இலங்கை இந்திய ஹரிஜன சேவா சங்கத்தின் காரியக் கமிட்டிக் கூட்டம் சங்கத் தலைவர் திரு எல் கே. முத்தையா பிள்ளை தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது அவ்வமயம் நீண்ட நேர விவாதங்களுக்குப் பின்னால் கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:

1. இலங்கை பாராளுமன்ற செனட் சபையில் ஒரு ஹரிஜன சகோதரருக்கும் ஸ்தானம் அளிக்குமாறு மேன்மை தங்கிய கவர்னரை இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகின்றது.

2 சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் ஹரிஜனங்களுக்கு கூடிய விரைவில் திறந்து விடப்படாவிடில் மேற்படி ஆலயத்தில் அகில இலங்கை இளைஞர் காங்கிரஸ் தலைவரும், இ. இ ஹரிஜன சேவா சங்கக் காரியதரிசியுமான திரு. பி என். குமாரசுவாமியவர்களால் உண்ணாவிரதம் மேற்கொள்ளுவதென்று கொண்டு வந்த தீர்மானமும் ஒப்புக் கொள்ளப்பட்டது என்பதாக சங்கக் காரியதரிசி எழுதியுள்ளார்.

கப்பல் எஞ்ஜினியர் மனைவியின் விவாகரத்து கோரிக்கை

நீதிபதி ஏற்றுத் தீர்ப்பளித்தார்

கொழும்பு, அக் 2

கப்பல் எஞ்ஜினியரான திரு ஈ. எல். டானியல் என்பவரது மனைவி ஸ்ரீமதி கேர்ட்டி ரீதா டானியல் தமது கணவரிடமிருந்து விவாகரத்துச் செய்து கொளள மனுச் செய்திருந்த வழக்கு கொழும்பு டிஸதிரிக்நீதிபதி முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது 1943 டிசம்பரில் திரு டானியலை விவாகம்செய்து கொண்டதாகவும் தங்களுக்கு ஒரு மகன் இருப்பதாகவும 1944-ம் ஆண்டின் பின் தன் கணவர் தங்களைக் கவனிக்கவில்லையென்றும ஸ்ரீமதி டானியல் தெரிவித்தார் நீதிபதி விவாகரததை அனுமதித்து தீர்ப்பளித்தார்.

சட்டமாணவர் தாக்கப்பட்டார்

களுத்துறை, அக். 1

பலப்பிட்டியைச் சேர்ந்த சட்டக் கல்லூரி மாணவரான திரு ஈ. அபயசேகரா என்பவரை களுததுறை வடக்கில் வில்லியம என்பவர் தாக்கியதாகக் கூறப்பட்டுத் தொடரபபட்ட வழக்கில் களுத்துறை மாஜிஸடிரேட் முன் எதிரி தாம் குற்றவாளியென்பதை ஒப்புக் கொண்டதன் மேல் மாஜிஸடிரேட் எதிரிக்கு ரூ. 30 அபராதம் விதித்தார்.

உயிர்நூல் பேராசிரியை

கொழும்பு, அக். 2

பெண்கள் கல்லூரியில் ஆசிரியையாக சுமார் 10 வருட காலம் தொண்டாறறிய மிஸ். கே தாமோதரம இபபொழுது சர்ககார பயிறசிக் கல்லூரியில உயிர் நூல் சாஸதிர பேராசிரியையாக நியமிககபபட்டுள்ளார். பருததித்துறை ஹார்ட்லி கல்லூரி அதிபராக இருந்து காலஞ்சென்ற திரு ஈ. பி. தாமோதரததின மகளான இவர் சுண்டிககுளி ஸ். எம். எஸ். பெணகள் கல்லூரியின பழைய மாணவியாகும.

குளவிகள் குத்தியதால் ஒருவர் மரணம்

கொழும்பு, அக் 2

ஹொரணையைச் சேர்ந்த ரேமுனு எனபவர் ஒரு மரததில ஏணுகையில அவரைக் குளவிக கூடடம் தாக்கியதாகவும குளவிகளால குததப்பட்ட ரேமுனு ஆஸபததரியில அனுமதிககபபடடு அங்கே மரணமடைந்தாரென்றும தெரிவிக்கபபடுகிறது

சமையற்காரன் மீது பத்து குற்றச்சாட்டுகள்

எதிரிக்கு 6 வருட சிறைத் தண்டனை

கொழும்பு, அக். 2

கடந்த வருடம் மார்ச் மாதம் பாணந்துறையில் உள்ள ஒரு டி. ஜே எல். பெர்னான்டோ என்பவர் வீட்டிலுள்ளவர்களை உணவில் நஞ்சூட்டிக் கொல்ல முயற்சித்ததாகவும், அவர்களை வெளியே விரட்டிச் சென்றதாகவும், வீட்டிலிநந்து ரூபாய் 5427 சதம் 50 மதிப்புள்ள சொத்துக்களை களவாடியதாகவும் வேறு பல குற்றங்களைப் புரிந்ததாகவும் ஜோன் சிங்கோ என்னும் நபர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு அசைஸஸ கோர்ட்டில் விசாரணைக்கெடுக்கப்பட்டது. திரு பெர்னான்டோவின் வீட்டிலே ஜோன் சிங்கோ சமையற்காரராக இருந்ததாகக் கூறப்பட்டது. இவர் மீது சாட்டப்பட்ட பத்துக் குற்றங்களையும் எதிரி ஒப்புக் கொண்டார் எதிரிக்கு நீதிபதி 6 வருச் சிறைத் தண்டனை விதித்தார்.

7000 ரூபாய் நகைகள் களவு

கொழும்பு அக். 1

கோட்டையில் உள்ள ஒரு கம்பெனியில் இருந்து மொத்தம் 7000 ரூபாய் பெறுமதியான நகைகள் களவாடப்பட்டிருக்கின்றனவாம். இந்நகைகள் காட்சிக்காகக் கணணாடிப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. ஒரு கத்தரிக்கோலும், காட்சிப் பெட்டியின் சதவும் அரசாங்கப் பரிசோதகருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

குடும்பத்தினர் எல்லோரையும் கத்தியால் வெட்டினார்

கைது செய்யப்பட்டவருக்கு ரிமாண்டு

கம்பஹா, அக். 1.

கந்தானை போலிஸ் ஸ்டேஷனுக்குச் சரிபக்கிலுள்ள எலிஸ் ஹாமி என்பவர் வீட்டில் செப்டெம்பர் மாதம் காலை சுமார் 12-30 மணிக்கு எல்லாட்ட அழுகைக் குரலைக் கேட்டு போலிஸ் இன்ஸபெக்டர் இளையகுப்பியும் மற்றும் கான்ஸடபிள்களும் ஸதலத்துக்கு ஓடிச் சென்றனர். அங்கு எலிஸ் ஹாமியுடைய வீட்டில் இருந்த அனைவரும் பலமாக வெட்டப்பட்டிருந்ததை கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களெல்லோரையும் நேநுபிட்டியாவைச் சேர்ந்த வின்சென்ட் பெரேரா என்னும் கள் சேர்ப்பவர் வெட்டியதாக கூறப்பட்டது. பொலிஸ் சுத்தியுள் ஓடிய வின்சென்ட் பெரேராவை இன்ஸபெக்டர் கைது செய்தார் வீட்டில் இருந்த சாயமடைந்தோர் ஆஸபத்திரிக்கு அனுப்பப்பட்டனர்.

கம்பஹா மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் செய்யப்பட்ட எதிரியை (மேற்கொண்டு விசாரணை முடியும்வரை) அக்டோபர் 10-ம் தேதிவரை ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸடிரேட் உத்தரவிட்டார்.

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

வட இலங்கையிலிருந்து வெளியாகும்

கலை அறிவுப் போட்டி ஆரம்ப தினத்தை எதிர்பாருங்கள்.

குறைந்த கட்டணம். நிறைந்த லாபம்.

உண்மையானது. உயர்வுள்ளது.

நன்மை தருவது நாடெல்லாம் புகழ்வது.

முழு விபரங்கட்கு:-

6-10-47 சுதந்திரனை எதிர்பாருங்கள்.

குறிப்பு:—

எங்கள் போட்டிக் கூப்பன்களை விநியோகிப்பதற்கு இலங்கை முழுவதும் ஏஜண்டுகள் தேவை கருத்தை கமிஷனுடன்.

கலை அறிவுப் போட்டி நிலையம்,

மெயின் ஸ்ரீற், பருத்தித்துறை.

கதம்பைக் கயிறு

தேவைக்கு எழுதுங்கள்

இந்தொட்டை கதம்பைக் கயிறு, இன்னும் தும்பால் செய்யப்பட்ட சகலவிதமான சாமான்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்தில் நேரிலோ, தபால் மூலமோ விலை விபரங்கள் அறிந்து கொள்ளலாம். சில முக்கிய சாமான்கள் ஆர்டருக்கு குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும். மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகைகள் காண்பிக்கப்படும்.

A. Abdul Kaiyoom,
Coir Ropes
Manufacturer at Gintota
No 44, Wolfendahl Street
Colombo.

ஏ. அப்துல் கையும்,
14, ஆதிருப்பள்ளித் தெரு
கொழும்பு.

கட்டிட வேலைக்கு வேண்டிய எல்லா விதமான சாமான்களும் குறைந்த விலையில் கிடைக்கும் இடம்

செட்டிநாட் கார்ப்பொரேஷன் லிமிடட்

116/118 கெய்சர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்க-துருக்கி ராணுவக் கமிட்டி

அமெரிக்கா தலைமையில் ஏற்படுத்த முயற்சி

ஏதென்ஸ், அக். 1

அமெரிக்காவின் தலைமையில் கிரேக்க ராணுவ சபையும் துருக்கி ராணுவ சபையும் ஒத்துழைக்க ஒரு கமிட்டி நியமிக்க அமெரிக்கர்கள் முயற்சி செய்து வருவதாக கிரேக்க சர்க்கார் தகவல் தெரிவிக்கிறார்கள்.

இது சம்பந்தமாக, வெளியூருக்கு ரயில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் கிரேக்க மன்னர் பாலைச் சந்திப்பதற்காக, கிரீஸிலுள்ள அமெரிக்க ராணுவத் தகவல் தலைமை அதிகாரி ஜெனரல் சேம்பர்லின், அமெரிக்க ஸதானிகர் மாக்வீக், அமெரிக்காவின் உதவி தூதுக் கமிஷனின் ராணுவப் பகுதித் தலைவர் மேஜர் ஜெனரல் லே வ்ஸே ஆகிய மூவரும் விமான மார்க்கமாக ஸலோனிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். வட கிரீஸில் சுற்றுப் பயணம் செய்ய பால் மன்னர் கோஸிமானிக்கு ரயில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது அமெரிக்கர்களைச் சந்திப்பதற்காக அவசரச் செய்தி கிடைத்ததன் பேரில் தனது ரயிலை ஸலோனிகாவில் நிறுத்தி வைத்திருக்கிறார். கிரேக்க-துருக்கி ராணுவ ஒத்துழைப்புக் கமிட்டி ஏற்படுத்துவது சம்பந்தமாகவே கிரேக்க மன்னரும் அமெரிக்க தலைவர்களும் இங்கு கலந்து பேசுவார்கள் என்று தெரிகிறது. இந்தக் கமிட்டியில் இரண்டு உயர்தர கிரேக்க ராணுவ அதிகாரிகளும் இரண்டு உயர்தர துருக்கி ராணுவ அதிகாரிகளும் அங்கத்தினராக இருப்பார்கள் என்றும் அதற்கு ஒரு அமெரிக்க உயர்தர ராணுவ அதிகாரி தலைமை வகிப்பார் என்றும் சொல்லப்படுகிறது.

ஐக்கிய தேச ஸ்தாபனத்தில்

நியூயார்க், அக். 1

ஐக்கிய தேச ஸதாபன அரசியல் கமிட்டி அங்கத்தினர்களில் முக்கியமானவர்கள பாதுகாப்பு கவுன்ஸிலில் இந்தியா - உக்ரைன் தேர்தல் போட்டியில் ஈடுபட்டிருப்பதால் இன்று கமிட்டியில் நடைபெற விருந்த கிரீஸ பிரச்னைபற்றிய விவாதம் ஒத்திவைக்கப்பட்டிக்ருகிறது. எப்பொழுது தொடங்குமென்பது தெரியவில்லை.

ஸ்தாபனத்தில் புதிய அங்கத்தினர் சேர்த்துக் கொள்வது சம்பந்தமாகபாதுகாப்புக்கவுனஸிலில் விவாதம் நடைபெற்றபோது, கிரீஸின் சமாதானத்துக்கு அபாயமுண்டாக்கக் கூடியவாறு பல்கேரியா நடந்து வருவதை அமெரிக்க பிரதிநிதி கண்டித்தார்.

இன்று ஆஸ்திரேலிய பார்லிமெண்டில் ஆஸ்திரேலிய பிரதம மந்திரி சிட்லி பேசியபோது, பல்கேரியாவில் எதிர்க்கட்சித் தலைவர் தூக்கிலிடப்பட்டது சம்பந்தமாக பிரிட்டன் பல்கேரியாவுக்குத் தெரிவித்துள்ள கண்டனத்தை ஆஸதிரேலியா ஆதரிப்பதாகத் தெரிவித்தார்.

உக்ரைன் புரட்சிக்காரர்

மூனிச், அக். 1

உக்ரைன் சுதந்திரததிற்குப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொண்டு பண்டரோவ் என்னும் ஸ்தாபனத்தைச் சேர்ந்த இரண்டு லட்சம் பேர்கள் 1946 மே மாதம் முதல் செக்கோஸ்லவகியாவிலும் போலந்திலும் திரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் 6000 பேர்கள் இப்பொழுது செக்கோஸ்லவகியாவிலிருந்து பவேரியா எல்லைக்குள் பிரவேசிப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அவர்கள் ஜெர்மனிக்குள் நுழைந்தால் அவர்களிடமுள்ள ஆயுதங்களைப் பரிஹரணம் செய்யும்படி ஜெர்மன் போலிசாருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

துருகி சர்க்கார் மீது துருக்கி பார்லிமெண்ட் நம்பிக்கை தெரிவிப்பதற்காக பார்லிமெண்டின் விசேஷ கூட்டம் புதன்கிழமை கூட்டப்படுகிறது.

சோவியத-பாரசிக எல்லைப் புறத்தில் சோவியத் துருப்புகள் வந்து குவிந்திருப்பதாக பாரசீக பிரதம மந்திரிக்கு தந்திச் செய்தி கிடைத்திருக்கிறது என்று வெளியான செய்தி உண்மையல்லவென்று மறுக்கப்படுகிறது. (ராய்ட்டர்)

மனைவியைப் பெறுவதற்கு சுப்ரீம் கோர்ட்டில் விண்ணப்பம்

தபால் இலாகா சிப்பந்தியின் 7 வருடக் காதல் கதை

மாத்தறை, அக். 2

தமது மனைவியை அப்பெண்ணின் சகோதரனும் மைத்துனனும் பலாத்காரமாக தடுத்து வைத்திருப்பதாகவும் தமது மனைவி ஜெயசிலி விக்ரமசிங்காவைத் தம்முடன் செல்ல அனுமதிக்க வேண்டுமென்றும் மாத்தறை சுப்ரீம் கோர்ட்டில் ஒரு இளம் தபால் இலாகா சிப்பந்தியான டபிள்யூ. சி. சிரில் என்பவர் ஒரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்குவிசாரணையின்போது சிரில்எபைவர் ஏழு வருடங்களுக்குமுன் அப்பெண்ணைத் தாம சந்தித்து காதல் கொண்டதாகவும் இவ்வருடம் பெப்ரவரி 11-ம் தேதி கொழும்பில் அப்பெண்ணைத் தாம் விவாகம் செய்து கொண்டதாகவும் அதன்பின் ஒருநாள் தாம் இல்லாத நேரத்தில் அப்பெண்ணின் சகோதரன் பியதாஸா விக்கிரமசிங்காவும் பெண்ணின் மைத்துனன் என். ஏ. ஒளடியஸ் என்பவரும் பலாத்காரமாக தன் மனைவியை அப்புறப்படுத்தி தமமுடன் கொண்டுபோய் வைத்திருப்பதாகவும தெரிவித்தார்.

ஜெயசிலி (22 வயது) தான் கடிதங்கள் எழுதியதும் அவரை விவாகம்செய்ததும் உண்மையென்பதை ஒப்புக்கொண்டு தமக்கு இப்பொழுது அவர் மேல அன்பில்லையென்றும் கூறினார். மாஜிஸ்ரேட் இவ் விபரங்களை சுப்பிரீம் கோர்ட்டுக்கு அனுப்பியுள்ளார்.

"இப்பொழுதுள்ள சர்க்கார் நிலைக்குமென உறுதியில்லை"

குருநாகலை பாராளுமன்ற அங்கத்தவர் பேச்சு

குருநாகலை, அக். 2

குருநாகலை பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ஸ்ரீநிசங்காவுக்கு அங்குள்ள மக்கள் வரவேற்பளித்ததனர். ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தல் நடந்த பொதுக் கூடடத்தில் திரு ஸ்ரீநிசங்கா பேசுகையில், யூ. என். பி. கட்சிக்காரர்கள் சர்க்காரை அமைக்க வேண்டி ஏற்பட்டிருந்ததால் அவர்கள் சர்க்காரை அமைத்துள்ளனரென்றும ஆனால் இந்தச் சர்க்கார் நிலையாக இருக்குமென்பதற்கு எவ்விதஉறுதியும் அளிக்க முடியாதென்றும் இப்பொழுதும் இடது சாரிக் கட்சியினரின் ஒரு சர்க்காரை நிலையாக அமைததுக் கொள்ள முடியுமென்றும் தான் தனிப்பட்ட முறையில் திரு சேனநாயக்காவுடனோ திரு. கொத்தலாவலையுடனோ எதிரியலல வென்றும் ஆனால அரசியல் கொள்கை முறையிலே தான் தாம் அவர்களுக்கு மாறு என்றும் கூறினார்.

சட்ட விரோதமாக அரிசி கடத்தினார்

ரூபாய் 1500 அபராதம் விதிக்கபபட்டது

குருநாகலை, அக். 2

வாரியப் பொளையில் இருந்து நீர்கொழும்புக்கு ஒருலொறியில 1020 கொத்து அரிசியை சட்ட விரோதமாக கடத்தியதாக பெனெடிக்ட் என்பவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் குருநாகலை மாஜிஸ்டிரேட எதிரிக்கு ரூபாய் 1500 அபராதம் விதித்தார்.

இலங்கையருக்கு அமெரிக்க யோகியின் பாராட்டு

களுத்துறை, அக். 2

ஸ்ரீ சுதர்சன புதத ஆலயத்தில் திங்கட்கிழமை இரவு திரு. ராபர்ட் ஹென்ஸ்மன் என்னும் அமெரிகக யோகி பேசுகையில் இலங்கை மக்களின் தாராள மனப்பான்மையையும் அந்நியரை ஆதரிக்கும் முறையையும் வெகுவாகப் பாராட்டிக் கூறினார்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

"யாழ்ப்பாண மக்கள் கண் விழிததோம்"

ஐயா,

யாழ்ப்பாணத் தொகுதித் தேர்தல் பிரசாரங்களில் ஸ்ரீமான் ஜீ ஜீ. பொன்னம்பலம், திரு. சேனநாயக்காவையும் யூ. என். பி. கட்சியைப் பற்றியும் விவரித்துக் கூறும்பொழுது ஸீமவரில் சிலர் இவர் பேசுவதெல்லாம் பொய்யெனக் கருதியிருக்கலாம். ஆனால் சேனநாயக்கா அரசாங்கம அமைத்த விதத்தில் அவர் சிறுபான்மையோராகிய இலங்கை, இந்திய தமிழ் மக்களில் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என விளங்கிவிட்டது. யாழ்ப்பாண மக்கள் ஒருங்கு கூடி தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்களை அனுப்பியது அவருக்குப் பிடிக்கவில்லை. தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்கள் போட்டி போட்ட இடங்களில் வாக்களித்த மொத்த தொகை ஏறக்குறைய 1,40,000. இத்தொகையில் தமிழ் காங்கிரஸ சார்பாக அளித்த வோட்டுகள் 82,499 இது ஏறக்குறைய 60 வீதத திறகு வருகிறது. சிறுபான்மையோரில் 60 வீதம் விருபபி எடுத்த அபேட்சகர் சேனநாயக்காவிற்குப் பிடிக்கவல்லை, ஏன் சுருங்கச் சொனனால் 60 வீத மக்களையே பிடிக்கவில்லை. நாம் யூ. என். பி. அபேட்சகர்களை தெரிந்து அனுப்பியிருந்தோமென்றால் இன்று மடடுமல்ல எங்களுக்கு யூ. என். பி. யின் கபட வேஷம் தெரியாமல் இருந்திருக்கும். இது தெரியவும எவ்வளவு வருஷம சென்றிருக்கும்.

இதையெல்லாம் முன் கூட்டியே யாழ்ப்பாண வாசிகளுக்கு போதித்த தமிழ் தலைவன் பொன்னனுக்கு நமது வாழ்த்துக்கள். பொனனன கூறியது பொன் மொழிகளே.

இங்ஙனம்,
நா. நமசிவாயம்

86, மானிப்பாய் ரோட்,
யாழ்ப்பாணம்.

சேனநாயக்காவின் தேசியம்

ஐயா,

மிஸ்டர் சேனநாயக்கா பிரதம மந்திரி பதவி ஏற்றவுடன் செய்த பிரசங்கத்தில் தமிழ்க் காங்கிரஸ வகுப்புவாதக் கட்சி என்று சொன்னார். உண்மையில் அவர் ஜாதிபேதத்தால் ஒரு நாட்டிற்கு எவ்வளவு துன்பம் ஏற்படுமென்பதை உணராமல் மற்றவர்கட்கு தேசியததைப் பற்றி உபதேசம் செயய முற்படுவது விநோதத்திலும் விநோதம்.

சிங்கள மகாசபையை, முஸ்லிம் லீக்கைசேர்ந்தவர்களோடு கட்டிக்குலாவும் மிஸடர் சேனநாயக்கா தமிழ்க் காங்கிரஸ என்றால் மடடும அது வகுப்புவாத ஸதாபனம் என்கிறார். அவர் உள்ளத்தில் இலங்கையில் உள்ள எல்லோரும் ஒரே ஜாதி, எல்லோரும் சகோதரர்கள் என்ற உணர்ச்சி இருந்தால் பிரதமர் பதவி ஏற்றவுடன் செயத ரேடியோபிரசங்கத்தில் இலங்கையில் வாழும் நாம் எல்லாரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் —சிங்களவர்—தமிழர்—முஸ்லிம் என்ற விததியாசங்களை விட்டு-நாம் எல்லோரும் இலங்காதேவியின் புத்திரர்கள்; நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள். ஆகமவ ஜாதமத பேதமின்றி ஒன்று சேருவோம் என்று சொல்லி இருக்கலாமே!

இதைவிட்டுத் தமிழ்க் காங்கிரஸ், இந்தியன் காங்கிரஸ் இவைகளைக் குறிப்பிடட மிஸடர் சேனநாயக்கா ஜாதிததிமிர் பிடித்து வாயில் வந்தபடி வகுப்புவாத வஷததைக் கக்கிக் கொண்டு திரியும் மிஸடர் குணசிங்காவைக் குறிப்பிடாததேன்?

"சிங்களவரே ஒன்று சேருங்கள்! இந்தியரை வங்காளக் குடாவில தள்ளுங்கள்! பொன்னம்பலம் தேவாங்கு!" என்று மிஸடர் குணசிங்கா சொல்லித்திரிவது தெரிந்தும், மிஸ்டர் சேனநாயக்கா அவரை (குணசிங்காவை) கண்டிக்காபல், கண்டிப்பதறகுப் பதிலாக அவரைத தொழில் மந்திரியின் காரியதரிசியாக நியமித்ததேன்.

இதை சற்று உற்று யோசித்தால் ஐயோடா, சேனநாயக்காவின் தேசியம் என்ன என்பது சொலலாமலே விளங்கும்.

வகுப்புவாதக் கடலில் ஆனந்தமாய்த் தோய்ந்தெழும் மிஸடர் சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சி (யூ. என். பி) நாட்டில் அரசாங்கத்தை நடத்தும்வரை இலங்கையில் பசியால் வாடும் எந்த ஜாதி மக்களுக்கும் நன்மை தராது.

சிங்கள சகோதரர்களுக்குத் தன்னும் உண்மையில் இவர் நன்மை செய்யப் போகின்றாரா? அதுவும் இல்லை.

தமது சொந்தக்காரர்களுக்கும் பெரிய முதலாளிகளுக்கும் தான் இவர் உதவி செய்வார். பசியால வாடும் மக்கள் ஜாதி மத பேதமின்றி, ஒன்றுசேர்ந்து அரசாங்கததை அவர்களிடம் இருந்து எடுத்து பாட்டாளி மக்களின் அரசாங்கமாக்க முன்வர வேண்டும்.

நாம் எல்லோரும் ஓர் இனம்! எல்லோரும் ஓர் குலம்! எல்லோரும் இந்நாட்டு மக்கள்.

இங்ஙனம்,
மா. மு. பொன்னம்பலம்.

15-1 பீச் ஸ்டிரீட், பெட்டா.

சிற்றம்பலம் ராஜினாமாச் செய்வாரா?

ஐயா,

திரு. ஸி. சிற்றம்பலம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ தலைவர் திரு ஜீ ஜீ பொன்னம்பலத்தின் உதவியைக் கொண்டே மன்னார் தொகுதியில் பாராளுமன்றப் பிரதிநிதியாக தெரியப்பட்டார் என்பது உலகமறிந்த விஷயம்.

யாழ்ப்பாணத்திலிருந்து எத்தனை நூற்றுக்கணககான காங்கிரஸகாரர் வந்து மன்னாரில் திரு. சிற்றம்பலததிற்காக வேலைசெய்தார்கள் என்பதை யாவர் மறுப்பர்.

மேலும் திரு. சிற்றம்பலம் மன்னார் மக்களுக்கு எத்தனை முறை தாம் யூ என். பி. அரசாங்கததில பதவிகள் ஏற்கமாட்டேனென்று வாக்குறுதிகள் கொடுத்துள்ளார். அவர் திரு. சேனநாயக்காவைத் திட்டிய திட்டுக்கள்தாம் எம்மாத்திரம்?

இப்படி எல்லாம் சொல்லியவர் கொழும்பு சென்றதும் யூ. என். பி. வலையில் சிக்கிவிட்டார். மர்மமென்ன?

யூகாஸ காரியோத்என்று திரு. தியாகராஜாவைத் திட்டிய திரு. சிற்றம்பலம் இப்பொழுது யூதாஸ்காரியோததிலும் பார்க்க மோசமான நிலையில் காரியங்கள் செய்திருக்கிறாரே! இத்தனை மயக்க வலையா, மந்திரி வலை?

பண்டைக்காலத்தில் ஒரு ராஜனைச் சிலர் பல்லக்கில் ஏற்றிக் காவிச் சென்று ஒரு ஆற்றைக் கடக்கும்பொழுது ஆழமான இடம் வந்தபொழுது, இராஜனைப் பல்லக்குடன தொக்கென்று கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டார்களென்று ஒரு கதையுண்டு. இதே மாதிரி திரு சிற்றம்பலம் செய் நன்றி மறந்து யூ என். பி. வலையில் சிகிகித தமிழ்த் தலைவனைக் கைவிடுவாரென்று ஒரு சிறிது அறிந்திருந்தாலும் நாம் ஒரு வாக்கும் கொடுத்திருக்க மாட்டோம்.

இப்பொழுது ஏதோ மன்னருகு வந்து நாலு மூன்று சடடம்பீமாருக்குதாம் தமது பிரதிநிதிப்பதவியை ராஜினாமா செய்யத் தயார் என்று கூறியதாகப் பத்திரிகைகளில் வாசித்தோம்.

உண்மையில் அவர் ராஜினாமாச் செய்வதே முறை. பததுமுறையும் ராஜினாமாச் செய்து யூ என். பி. அங்கத்தவராகப் போக முடியுமென்றால் போவது நல்லது.

எங்கே, ராஜினாமாச் செய்யுங்கள் சிற்றமபலம் துரையே!

இங்ஙனம்,
அந்தோனி பீரிஸ.

வங்காலை, 18-9-47

கொழும்பு, அக். 3

இலங்கை குருடர் செவிடர் பள்ளிகூடததிறகாக நிதி சேர்க்கும் கொடி விற்பனை தினம் அகடோபர் 10-மதேதியாகும் இததினத்தில் இப்பாடசாலை நிதக்காச கொடிகள் விற்கப்படும்.

பாதுகாப்புக் கவுன்ஸிலில் ரஷியாவின் பிடிவாதம்

பழைய விரோத நாடுகள் சேருவதுபற்றி தகராறு

நியூயார்க், அக். 2

நேற்றிரவு நடைபெற்ற பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டத்தில், ஐக்கியதேச ஸதாபனத்தில் சேருவதற்கு பல்கேரியா, ஹங்கேரி, ருமேனியா ஆகிய நாடுகளின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இத்தாலியும் பின்லந்தும் சமர்பபித்துள்ள மனுக்கள் அங்கீகரிக்கப் பட்டன ஆனால் ரஷியா தனது விசேஷ சலுகை வாக்கை உபயோகித்து இததாலியும் பின்லந்தும் சேருவதை நிராகரித்துவிட்டது.

இதுசம்பந்தமாக ரஷிய பிரதிநிதி குரோமிகோ பின்வருமாறு தெரிவித்தார்:- ஐந்து நாடுகளும் ஏககாலத்தில சேர்க்கபடின் அதற்கு ரஷியா ஆதரவளிக்கும் ஒவ்வொரு நாடும் தனித் தனியாக சேர்க்கப்படின அதற்கு ரஷியா அனுமதக்காது.

பாதுகாப்புகவுன்ஸிலின் அமெரிக்க பிரதிநிதியான சௌட்டர் ஆஸடின் நேற்றிரவு ரேடியோவில் பேசியபோது, ரஷியா விசேஷ வாக்கால் நிராகரித்த இத்தாலியையும் பின்லந்தையும் சேர்க்கும்படி அசெம்பிளி பாதுகாப்புக்கவுன்ஸிலுக்கு உத்தரவிட வேண்டுமென்றும், அதற்கு முன் ரஷியா தனது விசேஷ வாக்கால் நிராகரித்த ஆஸதிரியா, அயர்லந்து, போர்ச்சுகல், டிரான்ஸ ஜோர்டான் ஆகிய நாடுகளையும் சேர்த்துக் கொள்ளும்படி உத்தரவிட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்தியா-உக்ரைன்போட்டி

நியூயார்க், அக். 2

பாதுகாப்புக் கவுன் ஸிலில் போலந்து காலி செய்த ஸதானத்திற்கு நடைபெற்ற தேர்தலில் இந்தியாவும் உக்ரைனும் போட்டி போடடன. மெஜாரிட்டியாக 38 வோட்டுகள் பெறும் நாடே தேர்ந்தெடுக்கபடும். இந்த மெஜாரிட்டி கிடைக்காது 9 தடவைகள்மீண்டும் மீண்டும் தேர்தல் நடைபெற்றது. 9 வது தடவையும் ஒருவருகும் வேண்டிய மெஜாரிட்டி கிடைக்கவில்லை. உக்ரைனுக்கு 32 வோடடுகளும் இந்தியாவுக்கு 24 வோடடுகளும் கிடைததன. ஆகவே தலைவர் இததேர்தலை ஒத்திவைத்தார்.

அதன் பிறகு பொருளாதார சமூக கவுன்ஸிலுக்கு 6 அங்கத்தினர்களைத் தெரிவு செய்ய தேர்தல்நடைபெற்றது. இதற்கு ஆஸதிரேலியா, பிரேஸில், பிரிடன், டெனமார்க், போலந்து, சோவியத் ரஷியா ஆகிய 6 நாடுகளும் தெரிந்தெடுக்கப்பட்டன.

இந்தோனேஷியாவில் அமெரிக்க தலையீடு

ஸ்தானிகர் கமிட்டி அறிக்கையைத் தாமதப்படுத்தும் அக்கிரமம்

பட்டேவியா, அக் 1

இந்தோனேஷிய யுத்த நிறுத்த விசாரணை செய்து, ஸ்தானிகர் கமிட்டி தயார் செய்துள்ள அறிககையை பாதுகாப்புகவுனஸிலுக்கு அனுப்பவொட்டாது அமெரிக்க ஸதானிகர் தடுத்து விட்டார். அவர் அதில் கையெழுத்துப் போட மறுத்து தாமதப்பட்டு வந்த 8 அமெரிகக ராணுவ அதிகாரிகள் நிலைமையைத் தாங்களே விசாரித்து முடிவுசெய்த பிறகுதான் அறிக்கை ஒப்புக்கொளளப்படுமென்று தெரிவித்தார். அறிக்கை செப்டம்பர் 30-ம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டுமாதலால, ஸதானிகர் கமிட்டியார் அமெரிக்கரின் நடத்தையை எடுத்துக் காட்டி அறிக்கை தாமதப்படுத்தப்பட்டிருப்பதுகுறித்து பாதுகாப்புக்கவுன்ஸிலுக்கு தந்தியனுப்பியிருக்கிறார்கள். ஜப்பானிலுள்ள மக்ஆர்தர் உததரவின் பேரிலும் அமெரிக்க யுத்த இலாகாவின் உத்தரவின் பேரிலும் இந்த 8 அமெரிக்க ராணுவ அதிகாரிகளும் இந்தோனஷியாவுக்கு வந்திருக்கிறார்கள்.

மூவர் கமிஷனில் அமெரிக்காவின் பிரதிநிதியாக கிரஹாம் என்பவரை நியமித்திருப்பதாக அமெரிக்கா அறிவக்கிறது.

அமெரிக்காவில் உணவு சேமிப்பு பிரசாரம்

மேற்கு ஐரோப்பாவில் பட்டினி அபாயம் தீர

வாஷிங்டன், அக் 1

இன்று வெள்ளை மாளிகையில் நடைபெற்ற புதிய உணவுக் கமிட்டிக் கூட்டததில் ட்ரூமன் பேசியபோது ஐரோப்பிய உதவிக்காக அமெரிக்கர் 10 கோடி புஷல் தானியத்தை சேமிக்க வேண்டுமென்றும ஆடு, மாடு, குதிரை பன்றி முதலிய கால் நடைகளுககு செலவிடப்படும் தானியங்களைக் குறைக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். கமிட்டித் தலைவர் பேசியபோது எந்த அரசியல் யுத்தத்திலும அமெரிக்கர் வெற்றியை நிலைநாட்டியிருப்பதுபோல் இந்த ஐரோப்பிய பட்டினி யுத்தத்திலும அமெரிக்கர் வெற்றிகாண வேண்டுமென்று கூறினார் உலக உணவு நெருக்கடிபற்றி ட்ரூமன் ஞாயிற்றுக்கிழமை இரவு அகில அமெரிக்கருகும் ரேடியோ மூலம் பிரசங்கம் செய்வார்.

அமெரிக்காவில் உணவு சேமிப்பு பிரசாரம் வெற்றியடையாவிட்டால் உள்நாட்டில் விலைவாசிக் கட்டுப்பாட்டையும், உணவுப் பங்கீட்டையும் அமுல் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ட்ரூமனின் அமெரிக்க பொருளாதார ஆலோசகர்கள் அவரை வற்புறுததினார்கள்.

அமெரிக்க அந்நிய நாட்டு மந்திரி மார்ஷல் உணவுக் கமிட்டியில் பேசிய போது, மேற்கு ஐரோப்பாவை பட்டினி அபாயத்திலிருந்து பாதுகாக்க ஒவ்வொரு அமெரிக்கனும் முயற்சிக்க வேண்டுமென்று கூறினார். (ராய்ட்டர்)

புதிய மந்திரியிடம் வர்த்தகர்கள் தூது

கொழும்பு, அக். 2

புடவைக் கட்டுப்பாட்டதிகாரி லாபத்தைக் குறைக்கும் சட்டம் ஒன்றைப் பிரகடனஞ் செய்ததன் காரணமாக புடவை வியாபாரிகள் சார்பில் ஒரு தூதுக் கோஷ்டி சென்ற வாரம் கவர்னரைப் பேட்டி கண்டது. இப்பிரச்னையை மேத. கவர்னர் புதிய தொழில் வர்த்தக மந்திரி கனம் சி சுந்தரலிங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டும் என்று கூறியதன் காரணமாக இன்று மீ. தூதுக்கோஷ்டி கனம் சுந்தரலிங்கத்தைப் பேட்டி காணும் எனததெரிகிறது. தூதுக்கோஷ்டிக்கு சட்ட ஆலோசகர்களாக திருவாளர்கள் என். நடேசன், எஸ். செல்லமுத்து ஆகியோர் செல்வார்கள்.

புத்த மதத்தை ஆசியாவில பரப்ப ஏற்பாடுகள்

கொழும்பு, அக். 3

மகாபோதி சங்க ஆதரவில் ஆசியாவிலே புத்த மததைப் பரப்புவதற்குப் பயிற்சிபெறும் ஐந்து பிக்குகள் இவ்வருடமுடிவில் சாரனாத் செல்வார்கள் இந்த திடடத்தின்படி இருசீன பிக்குகளுக்கும் இச்சங்கம பயிற்சியளிக்கின்றது.

கண்டி முனிஸிபல் சபை காரியதரிசி கடமை ஏற்றார்

வேலை எதுவும் கொடுக்க வேண்டாமென்று மேயர் உத்தரவு

கண்டி, அக். 2

ஸ்தலஸ்தாபன சர்க்கார் கமிஷனால் கண்டி முனிஸிபல் சபையின் காரியதரிசியாக நியமிக்கப்பட்ட திரு ஸி நாணயக்காரா கண்டி முனிஸிபல் சபை கமிஷனரிடம் நேற்றுக்காலை சென்று தாம் பதவி ஏற்பதாகத் தெரிவித்தார். கமிஷனர் தகவலை மேயர் திரு. எல் டி சில்வாவுக்குத் தெரிவித்தபோது, திரு. நாணயக்காராவுடைய சம்பள விஷயம் முடிவு செய்யப்படும் வரை அவருக்கு வேலை எதுவும் கொடுக்க வேண்டாமென்று மேயர் தெரிவிததுள்ளார். முனிஸிபல் சபையின் முடிவுப்படி இவருக்கு கடமையாற்றும்படி உத்தரவு கொடுக்க முடியாதென்று மேயர் தெரிவித்துள்ளார். திரு. நாணயக்காரா ரிஜிஸ்டரில் கையெழுத்திட்டுவிட்டு தமது இருப்பிடத்துக்குச் சென்று இருந்தார். அவர் தமது சம்பள விஷயம் பின்னால் முடிவு செய்யப்படலாமென்றும அது பற்றி தாம் சிரததை யெடுக்கவில்லையென்றும் தாம் இப்பொழுது பதவி ஏற்பதாகவும் கமிஷனர் மூலம் மேயருக்குத் தெரிவித்திருந்தார்.

இரு அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகள்

ஸ்தலஸ்தாபன சர்க்கார் கமிஷன் விசாரணை செய்கிறது

கொழும்பு, அக். 3

கண்டி முனிசிபல் சபையைச் சேர்ந்த திரு எஸ். ஏ. சின்னத்துரை, திரு கே. யூ. துனுவில் ஆகிய இருவர் மீதும் கொண்டுவரபபடடுள்ள குற்றச் சாடடுகள் சமபந்தமாக ஸதலஸதாபன சர்க்கார் கமிஷன் நகர மண்டபத்தில் விசாரணை நடத்துகின்றது. முதல் அதிகாரி மீது வரி சேமிக்கப்பட்டதில் சில ஒழுங்கற்றமுறைகள் இருப்பதாகவும் இரண்டாவது அதிகாரிமீது ரஜா இன்றி வேலைக்கு வாராதிருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தேசிய அபிவிருத்தி சேமநிதி இயக்க ஆரமபம்

கொழும்பு, அக். 3

தேசிய அபிவிருததி சேமநிதி இயக்ததை ஆரம்பித்து வைப்பதறகு நேற்று முன்தினம் இரவு நகர மண்டபத்தில் மேயர் திரு. ஆர். எல். எஸ். டிமெல் தலையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கவர்னர் அனுப்பிய செய்தியை மேயர் படிததுக் காட்டினார். இப்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை நீக்க சேமிப்பு அவசியமென்பதை கவர்னர் குறிப்பிட்டுள்ளார். சேமநிதி இயக்கத்தின் அவசியம், அதன் நன்மைகள் முதலிய விஷயங்கள் பற்றி பலரும் பேசினர்.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ ரோட் மருதானை
தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
சனி ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்.
சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!
"தாய் நாடு" தமிழ் படம்
வெற்றிகரமான 3-வது வாரம்!
அடக்கு முறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் பேராடடங்களைக் கொண்டது.
மெட்ரூஸ் மெயில் புகழ் பாட்லிங்மணி
புதிய நடிகை சுந்தரி
மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது
பெண்களுக்கும் சிறுவர்களுக்கும மெட்னியில் பால்கனிக்கு அரைசார்ஜ் எடுக்கப்படும்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 3-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org